Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 28 புதன்கிழமை (14.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 330

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித நாணயம், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-4392)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## பிரதமர் மகிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை இன்று பாராளுமன்றில்?

(கொழும்பு)

புதிய பிரதமர் மகிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை இன்று பாராளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் இன்று காலை 10.00 மணிக்கு கூட்டப்படும் என சபாநாயகர் அறிவித்துள்ள நிலையில் ஐ.தே.கவினரால் மேற்படி நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (ம)

## பதவியிலிருந்து விலகுவதாக மகிந்த மைத்திரிக்கு கடிதம்

### கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ பதவி விலகவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பிரதமர் பதவியில் இருந்து தான் விலகிக் கொள்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, மகிந்த ராஜபக்ஷ கடிதம் அனுப்பி அறிவித்துள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய நிலையில் சட்ட விரோத பிரதமர் பதவியை 23

## நாளை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம்

### ஐ.தே.க.அறிவிப்பு

(கொழும்பு)

மக்களுக்கு நீதிமன்றத்தின் தீர்ப்பினால் கிடைத்த வெற்றியைக் கொண்டாடுவதற்கு நாளை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 23

# பாராளுமன்ற கலைப்பு தொடர்பான ஜனாதிபதியின் உத்தரவுக்கு நீதிமன்று இடைக்கால தடை

(கொழும்பு)

பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை அறிவித்த ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலுக்கு டிசம்பர் மாதம் 7ஆம் திகதிவரை இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் உள்ளிட்ட மூவர் அடங்கிய நீதியரசர் குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## கட்சித் தலைவர்களின் விசேட கூட்டத்துக்கு சபாநாயகர் அழைப்பு

(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜயசூரிய கட்சித் தலைவர்களுக்கான விசேட கூட்டம் ஒன்றிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கட்சித் தலைவர்களுக்கான விசேட கூட்டம் இடம்பெறவுள்ளதாக சபாநாய 23

## கிளிநொச்சியில் முன்னாள் போராளி மர்ம மரணம்

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி குமாரபுரம் பகுதியைச்சேர்ந்த 29 வயதுடைய முன்னாள்போராளியான மரியஜெபசேன் விஜிதன் என்ற குடும்பஸ்தர் ஒருவர் வீட்டில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். 24

## அரசியல் யாப்பை மீறி யாராலும் செயற்பட முடியாது

### நீதிமன்ற தீர்ப்பு குறித்து ரணில் கருத்து

(கொழும்பு)



நாட்டின் அரசியல் யாப்பை மீறி யாராலும் செயற்பட முடியாதென்பதை உயர்நீதிமன்ற தீர்ப்பு வெளிக்காட்டியுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் 23


## பரபரப்பான சூழலில் இன்று பாராளுமன்றம் கூடுகின்றது

### சபாநாயகர் கரு ஜெயசூரிய அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரின் ஊடகப் பிரிவினால் நேற்று செவ்வாய்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த நவம்பர் 4ஆம்திகதி ஜனாதிபதி விடுத்த 2095/50 இலக்க வர்த்தமானி அறிவித் 23

## சர்வாதிகாரத்திலிருந்து இலங்கை காப்பாற்றப்பட்டது

### மங்கள சமரவீர

(கொழும்பு)

நீதிமன்றத்தின் தீர்ப்பு காரணமாக இலங்கை சர்வாதிகாரத்தின் பிடியிலிருந்து காப்பாற்றப் 23

## தேர்தலுக்கான உத்தரவை நீதிமன்றம் நீக்கவில்லை

### காபந்து அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலை இடைநிறுத்தி வைப்பதற்கான இடைக்கால உத்தரவையே உயர் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

எனினும் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான உத்தரவை உயர் நீதிமன்றம் நீக்கவில்லை.

இவ்வாறு காபந்து அரசின் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார். 23

## நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் நேற்றிரவு அவசர கூட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் கீழ் பாதுகாப்புச் சபைக் கூட்டம் நேற்றிரவு அவசரமாகக் கூடியுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி, இராணுவம், கடற்படை, விமானப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் 23

## நீதிமன்ற தீர்ப்பையடுத்து வெடிகொழுத்தி கொழும்பில் ஆரவாரம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை கலைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்திருந்த வர்த்தமானி அறிவித்தலை ஒத்திவைக்குமாறு உயர் நீதிமன்றம் 23

## எதிர்வரும் 7ஆம் திகதி வரை தேர்தல் செயற்பாட்டை நிறுத்துக

### தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் 7ஆம் திகதி வரை தேர்தல் செயற்பாடுகளை நிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு எதிர்வரும் 7ஆம் திகதிவரை இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 23

## யாழ்.குடாநாட்டில் பலத்த காற்று வீசும்

(கொழும்பு)

மத்திய வங்களா விரிகுடாவில் உருவாகியுள்ள "கஜா" புயல் காரணமாக வடக்கு, வடமத்திய மாகாணங்கள், புத்தளம் மற்றும் திருகோணமலை போன்ற மாவட்டங்களில் இன்றும் நாளையும் கடும் காற்று வீசக்கூடும் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## இரத்தினம் இரவீந்திரநாதன்

மலர்வு 22.02.1965

உதிர்வு 12.11.2018

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மத்தி கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் இரவீந்திரநாதன் (ரவி) 12.11.2018 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் அமரர் இரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் மகனும் பவானி இரவீந்திரநாதனின் பாசமிகு கணவரும் தர்மிக்கா (பொறியியற்பீட மாணவி), துளசிகா (மாணவி - வெளிவாரி பட்டப்படிப்பு), லக்ஷிகா (கணனி கற்கைநெறி - கொழும்பு பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பசுபதி - மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் லிங்கநாதன், மதிவதனி, கலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பவானந்தன், நித்தியானந்தன், உமா, கோகுலானந்தன், தவனேசன், மஞ்சுளா, மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (15.11.2018) வியாழக்கிழமை 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4405)

கரணவாய் மத்தி,
கரவெட்டி.

தகவல்:-
குடும்பத்தினர்
021-226 4305

# கண்ணீர் அஞ்சலி



எமதருமை நண்பன் சிவராசா சிவநேசன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

### அமரர்

## சின்னத்தம்பி சிவராசா

பிறப்பு : 27.08.1940 இறப்பு : 11.11.2018

அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த கவலையடைவதோடு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ரன் மல்ரி சென்ரர்**

உரிமையாளரும் ஊழியர்களும்

இல.48, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
077 724 6461

(6441)

# நாடாளுமன்றை கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு

## உச்ச நீதிமன்றில் சட்டமா அதிபர் விளக்கம்

(கொழும்பு)

19 ஆவது திருத்த சட்டத்தின் 33 (02) சரத்தின் படி பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் இருப்பதாக சட்டமா அதிபர் உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்றது.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் விளக்கமளிக்கப்பட்டது.

ஜனாதிபதியால் பாராளுமன்றத்தை கலைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் அரசியலமைப்புக்கு எதிரானதல்ல.

ஆகவே பாராளுமன்றம் கலைக்கப்பட்டதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை நிராகரிக்குமாறு சட்டமா அதிபர் சார்பில் உச்ச நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது. (இ-7)

## நாடாளுமன்றம் கலைப்பு

# ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு ஆதரவாக 5 மனுக்கள் தாக்கல்



(கொழும்பு)

நாடாளுமன்றத்தை கலைத்தமை அரசியலமைப்புக்கு முரணானதென மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்றத்தை கலைத்த ஜனாதிபதியின் நடவடிக்கை சரியானதென 5 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களும் அமைச்சர்களுமான உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார மற்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்டோர் உயர்நீதிமன்றில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை குறித்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதியின் செயற்பாடு அரசியலமைப்புக்கு முரணானதென தெரிவிக்கப்பட்டு ஐ.தே.க., த.தே.கூட்டமைப்பு, ஜே.வி.பி. போன்ற கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் நேற்று முன்தினம் 13 மனுக்களைத் தாக்கல் செய்தன.

அவை தொடர்பான இரண்டாம் கட்ட விசாரணை நேற்று முற்பகல் 10 மணிமுதல் இடம்பெற்றது.

இந்நிலையில், ஜனாதிபதியின் நடவடிக்கையை ஆதரித்து நேற்று ஐந்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (இ-7)

## எல்லாவற்றையும் குழப்பிவிட்டார் மைத்திரி

# ஜனநாயக விரோதிகளை தோற்கடிக்க புதிய கூட்டணியை உருவாக்குவேன்

## முன்னாள் அமைச்சர் ராஜித சபதம்



(கொழும்பு)

ஜனநாயக விரோதிகளை தோற்கடிக்கின்ற புதிய கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் போவதாக ஐக்கிய தேசிய முன்னணியின் மூத்த தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

ஜனாநாயகத்தை வலியுறுத்தி தலைநகர் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'என்னவிருந்தாலும் இனப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். இளைஞர்கள் அழிவதும் இனப்பிரச்சினையால் தான். இதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எதிர்க்கட்சியில் இருக்கும் தரப்பினர் குழப்பம் ஏற்படுத்தினர்.

முன்னாள் ஜனாதிபுதி சந்திரிகா இதனைத் தீர்ப்பதற்கு முன்வந்தபோது ஐக்கிய தேசியக் கட்சி குழப்பியது. ஐக்கிய தேசியக் கட்சி முயற்சித்தபோது சுதந்திரக் கட்சி தடுத்தது. எனவே இரண்டு கட்சிகளும் ஒன்றாக இருக்கையிலேயே தீர்த்துவிடுவோம் என்று தேசிய அரசை உருவாக்கினோம். எனினும் இரண்டு தரப்பினரும் நாட்டின் தேசியப் பிரச்சினைகளை தீர்க்காது ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டனர்.

இவ்வாறுதான் அரசாங்கம் அழிவடைந்தது. இதனை நிறுத்த மைத்திரிபால சிறிசேன முயற்சிக்கவில்லை. நாங்கள் சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுத்து இறுதி வருடத்தில் தேர்தலுக்கு தயாராகினோம். எனினும் அந்த மனிதர் அனைத்தையும் குழப்பிவிட்டார்.

எனினும் இதுவும் நன்மைக்குத்தான். இப்போது உதவாக்கரைகள் இல்லை. தலைவர்கள் பின்னால் சென்று யார் சரியானவர்கள் என்று கண்டு பிடிப்பதை விட எது சரி என்பதை கண்டுபிடித்து கூட்டணி அமைப்போம்.

அதனை அமைப்பதற்குத்தான் செல்கிறேன். அதில் தலைவர்கள் அனைவரும் இணைந்து தலைவர்கள் சபையினூடாக அரசை கொண்டுசெல்வோம். கூட்டணியில் இரண்டு, மூன்று நிறங்கள் இல்லை. வானவில் கூட்டணியாக அணிதிரள்வோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நான் ஒருபோதும் இனவாதத்துடன் செயற்படவில்லை

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மக்களுக்கு எதிர்காலத்தில் எவ்வித பிரச்சினையும் ஏற்பட இடமளிக்கப்போவது இல்லையென புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை உறுப்பினர்களை, மாளிகாவத்தையில் அமைந்துள்ள உலமாவின் தலைமையகத்தில் சந்தித்து கலந்துரையாடிய சந்தர்ப்பத்தில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தின்போது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் முஸ்லிம்கள் முகங்கொடுத்த சகல பிரச்சினைகளுக்கும் தனது தலைமையிலான அரசிலேயே தீர்வு காணப்பட்டதாக பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூதூரில் ஏற்பட்ட பிரச்சினைகள், முஸ்லிம்கள் வட, கிழக்கில் விவசாயம் செய்ய முடியாத நிலைமை, வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்களது மீள்குடியேற்ற பிரச்சினை என்பவற்றை தானே தீர்த்து வைத்ததாகவும் பிரதமர் மகிந்த தெரிவித்துள்ளார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு சகல தரப்பினரும் சகல இனங்களும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் எனவும் தான் ஆட்சியில் இருந்த போது இன, மத பேதமின்றி செயற்பாடுகளை மேற்கொண்டதாகவும் இனவாத செயற்பாடுகள் நாட்டில் தலைதூக்காமல் இருக்க தன்னாலான செயற்பாடுகளை முன்னெடுத்ததாகவும் தெரிவித்தார்.

அளுத்கம சம்பவத்தின் போது தானும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளரும் நாட்டில் இருக்கவில்லை எனவும் அந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களது வீடுகளை மீள நிர்மாணித்துக் கொடுத்ததாகவும் முஸ்லிம்களுக்கு இனி ஒருபோதும் எவ்வித பிரச்சினையும் ஏற்படாது எனவும் மகிந்த உறுதியளித்துள்ளார்.

அரசியல் இலாபங்களுக்காக செயற்படும் இன ரீதியாக கட்சிகள் சகல இனங்களிலும் காணப்படுவதாகவும் அவர்களே அவ்வப்போது இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்துவதாகவும் மகிந்த தெரிவித்தார்.

தேசிய கட்சிகளில் அங்கம் வகிக்கும்போது இவ்வாறான இன, மத ரீதியான பிரிவுகள் இன்றி நாம் இலங்கையர் என்ற ரீதியில் செயற்பட முடியும் எனவும் தெரிவித்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, தாம் ஒருபோதும் இனவாதத்துடன் செயற்படவில்லை எனவும் தெரிவித்தார். (இ-7)

# ஐக்கியதேசியக் கட்சியின் தலைமையை ஏற்கத் தயார்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கும் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவதற்கும் நான் தயார் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிபிசியின் சிங்களச் சேவைக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.


உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டால் நான் எந்தப் பொறுப்பையும் ஏற்கத் தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தற்போதைய தலைமைத்துவத்தின் ஆதரவும் ஏனையவர்களின் ஆதரவும் கிடைத்தால் எந்த பொறுப்பையும் ஏற்கத் தயார் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவராவதற்கு வேறு எந்த நேர்மையற்ற ஜனநாயக விரோத வழிமுறைகளையும் பின்பற்றத் தயாரில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மரண அறிவித்தல்

## செல்லையா பஞ்சலிங்கம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பஞ்சலிங்கம் நேற்று (13.11.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லமுத்து தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - (ஐயா அண்ணை) ஞானம்மா தம்பதிகளின் மருமகனும் ரேணுவதியின் அன்புக் கணவரும் அஜந்தன், கணேசராஜாவின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற அரிய ரட்ணத்தின் சகோதரரும் சந்திராவதி, தேவராசா, செல்வராசா, புஸ்பவதி ஆகியோரின் மைத்துனரும் மதுரா, துஷ்யந்தியின் பாசமிகு மாமனும் ரிஷிகேஷன், சாயி கௌசல்யா, வைஷ்ாலியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2018) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(6446)

'கோவில் வாசல்'
K.K.S வீதி. இணுவில் மேற்கு. இணுவில்.

தகவல்:- குடும்பத்தினர்
தொ.பே: 021 205 4403

# மணிவிழா நாயகனை இந்நாளில் வாழ்த்துகின்றோம்

## மு/ஐயங்கன்குளம் மகா வித்தியாலயம்



திரு.இராசையா தங்கராசா (அதிபர்)
(1959 - 2018)

**சேவைப் பதிவுகள்:-**

- மு/கோட்டை கட்டியகுளம் அ.த.க.பாடசாலை (ஆசிரியர்)
- மு/அம்பலப் பெருமாள்குளம் அ.த.க.பாடசாலை (அதிபர்)
- மு/கோட்டை கட்டியகுளம் அ.த.க.பாடசாலை (அதிபர்)
- மு/ஐயங்கன்குளம் மகா வித்தியாலயம் (அதிபர்)

(C-4407)

14.11.2018இல் தனது 60ஆவது அகவை நிறைவைக் கொண்டாடும் மணிவிழா நாயகனை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றோம்.

*வாழ்த்துவோர்:* வலயக்கல்விப் பணிப்பாளர் (துணுக்காய்), கோட்டக்கல்விப் பணிப்பாளர் (துணுக்காய்), அதிபர்கள் (துணுக்காய் கோட்டம்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





எமது பாடசாலையைச் சேர்ந்த திருமதி மயூதினி யூட்நிக்ஷன், திருமதி உதயமலர் பார்த்தீபன் ஆகியோர் கடந்த 9ஆம் மாதம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிலே B.A பட்டத்தினைப் பெற்றுக் கொண்டதனையிட்டு பாடசாலை சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

best wishes

*வாழ்த்துவோர்:*
பாடசாலைச் சமூகம்,
கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
கிளிநொச்சி.

(C-4406)

# பங்களாதேஷ் வலுவான முன்னிலை

டாக்கா டெஸ்டில் சிம்பாப்வே அணியின் பிரண்டன் ரெய்லர் சதம் கடந்தார். எனினும், பங்களாதேஷ் முதல் இன்னிங்சில் 218 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

பங்களாதேஷ் சென்றுள்ள சிம்பாப்வே அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் சிம்பாப்வே வென்றது. இரண்டாவது போட்டி டாக்காவில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் பங்களாதேஷ்522/7 ('டிக்ளேர்') ஓட்டங்கள் எடுத்தது. 2ஆம் நாள ஆட்ட நேர முடிவில், சிம்பாப்வே அணி முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட்டை இழந்து 25 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பிரையன் சாரி (10), டிரிபானோ (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**பிரண்டன் சதம்**

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. டிரிபானோ (8) ஒற்றை இலக்கில் திரும்பினார். பிரையன் (53) அரை சதம் கடந்தார். தைஜுல் இஸ்லாம் 'சுழலில்' சீன் வில்லியம்ஸ் (11), சிக்கந்தர்ராசா (0) சிக்கினர். பிரண்டன் ரெய்லர், பீற்றர் மூர் ஜோடி அபாரமாக விளையாடியது. 6வது விக்கெட்டுக்கு 139 ஓட்டங்கள் சேர்த்தபோது, மூர் (83) அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார். பிரண்டன் டெய்லர் (110) டெஸ்ட் அரங்கில் 5ஆவது சதம் எட்டினார். சகபோவாவை (10) வெளியேற்றிய தைஜுல் 5ஆவது விக்கெட்டை கைப்பற்றினார்.

ஆட்டநேர முடிவில், சிம்பாப்வே அணி முதல் இன்னிங்சில் 304 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.


## சிறுநீரகம் தேவை

கிளிநொச்சியில் வசிக்கும் 23 வயதுடைய நபர் ஒருவருக்கு O+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை

தொடர்புகளுக்கு:-
0772623841, 0774212100


## யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி த.சற்சொரூபன் B.A



திருமதி ஐ.நடேஸ்வரன் B.Sc



செல்வி ஜெ.மைதிலி B.A

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டக் கற்கையைப் பூர்த்தி செய்து கலைப் பட்டதாரிகளான எமது பாடசாலை ஆசிரியர்கள் திருமதி த.சற்சொரூபன், செல்வி ஜெ.மைதிலி ஆகியோரையும் திறந்த பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டக்கற்கையைப் பூர்த்தி செய்து இன்றைய தினம் கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் பட்டம் பெறும் ஆசிரியை திருமதி ஐ.நடேஸ்வரன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:* அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை, சுன்னாகம்.

(6442)

# யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

**புதிய கல்வியாண்டிற்கான மாணவர் அனுமதி - 2019**

- மேற்படி பாடசாலையில் தரம் 6 மற்றும் ஏனைய தரங்களில் 2019ஆம் கல்வி ஆண்டில் சேர இருக்கும் மாணவர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றன.
- விண்ணப்பப்படிவத்தை வார நாட்களில் மு.ப 8.00 - 1.00 மணிவரை பாடசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
- விண்ணப்ப முடிவுத் திகதி 26.11.2018

தலைவர்
பாடசாலை அபிவிருத்திக் குழு

(C-4403)

# புதிய வாக்காளர்களை பொதுத்தேர்தலில் இணைத்துக் கொள்ள முடியவில்லை

## தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் தேசப்பிரிய கவலை

(கொழும்பு)

திடீரென பொதுத்தேர்தலை எதிர்கொள்ள நேரிட்டிருப்பதால் 2017ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின்படியே தேர்தலுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும், இடம் பெயர்ந்தவர்களின் வாக்குகள் குறித்து மேன்முறையீடு செய்வதற்கு காலம் வழங்கப்பட்டுள்ளது. நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கும் 20ஆம் திகதிக்கும் இடையிலேயே இதனை பூர்த்திசெய்ய எதிர்பார்த்திருந்தோம்.

எனவே, இவ்வருடம் புதிதாக வாக்குரிமையைப் பெற்ற வாக்காளர்களை இணைத்துக் கொள்ள முடியாமை தொடர்பில் கவலையடைகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



சர்வதேச ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஆணைக் குழுவின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதனால், ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதிநிதிகள் பகிர்ந்தளிப்பதில் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டிஅழைப்பும்

தோற்றம்
14
05
1937



மறைவு
16
10
2018

### அமரர் திருமதி. ரோகினியம்மா தாயுமானவர்

கடந்த 16.10.2018 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது தாயாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி வாயிலாக ஆறுதல் அளித்தவர்களுக்கும் மேலும் பல வழிகளில் உதவிகளைப் புரிந்து எமது துயரில் தோள் கொடுத்தவர்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 15.11.2018 வியாழக்கிழமை அதிகாலை 5 மணி முதல் 7 மணிவரை ஊறணி அந்தியேட்டி மடத்தில் நடைபெறவுள்ளது. அக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிரியையிலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மருதடி
வல்வெட்டித்துறை.

(சி-4393)

தகவல்:
விஸ்வரூபன்(மகன்),
ஜெயா(மகள்)



## 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர்.சின்னத்துரை வீரகத்திப்பிள்ளை

(சிரேஷ்ட சட்டத்தரணி)



தோற்றம்
13
05
1946

மறைவு
26
10
2017

ஓராண்டு நினைவிலும்
பல்லாண்டுக் கனவுகளை நனவாக்கி
உருகிய மெழுகாய் எம்முள் ஒளிரும் தீபமே!
இவ்வாண்டில் உமது உறவுகள்
உமக்காய் தீபமேற்றி உமது ஆன்ம சாந்திக்காய்
இறைபதம் வேண்டி நிற்கின்றோம்.

இல. 887, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

காலம் கரைந்தோடினும்
கலையா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


## இராசி பலன்

**மீனம்:** வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், யோகமான நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், கௌரவமான நாள்.

**இடபம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், டும்பத்தினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், நல்லவர்களை சந்தித்து நலம் காண்பீர்கள்.

**மிதுனம்:** எந்தக் காரியத்திலும் நிதானமாகச் செயற்படுவது நல்லது, வேலைச்சுமை கூடும் நாள், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் கூடும் நாள்.

**கும்பம்:** சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்யலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கடகம்:** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், பகைவர்கள் விலகுவர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல்கள் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம்.

**சிம்மம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்.

கிரகநிலை (இராசி சக்கரம்): செவ்; ராகு; சந்., கேது; சனி; குரு; சூரி. புதன். சுக்.

கிரகநிலை
சந்திராஷ்டமம்
புனர்பூசம்
இரவு 9.55 மணிக்கு
கும்-சந்

**14.11.2018**
ஐப்பசி 28, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சப்தமி முழுவதும்
உத்தராடம் காலை 6.10 மணிவரை
சுபநேரம் 4.37-6.07 மணிவரை
இராகுகாலம் 12.07-01.37 மணிவரை.
சர்வதேச குழந்தைகள் தினம்,
திருவண்ணாமலை கொடியேற்றம்,
அமிர்தசித்தம்

வளவன்

**தனுசு:** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும், பயணங்களால் பலனுண்டு, விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**துலாம்:** வாகன சுகமுண்டு, செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** மனநிறைவு கூடும் நாள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



குருநகர் யாகப்பர் ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலின் 25 ஆவது வருட நினைவு நாளை முன்னிட்டு நேற்றுக் காலை திருப்பலியும் அதனைத் தொடர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு மறைந்த 9 பேரின் நினைவாக தீபங்கள் ஏற்றப்பட்டன. (படங்கள்:-குருநகர் செய்தியாளர்)

# சமூக விரோதக் கும்பல் தாக்குதல் இரண்டு இளைஞர்கள் படுகாயம்

(வரணி)

நெல்லியடி பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட கரம்பான் தில்லையம்பலப்பிள்ளை யார் கோவிலுக்கு அருகாமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை 12 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் கூலி வேலைக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் மீது சமூக விரோத கும்பல் ஒன்று மேற்கொண்ட கொலை வெறித்தாக்குதலில் இளைஞர்கள் இருவரும்படுகாயமடைந்தநிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்த நிலை யில் வீதிக்கு அருகில் உள்ள வயல் வெளியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. சுமார் 8 பேர் கொண்ட கும்பலே இரும்புக்கம்பிகள், பொல்லுகள், கூர்மையான ஆயுதங்கள் போன்றவற்றினால் தாக் குதலை மேற்கொண்டுள்ளனர். தாக்குதலில் இருந்து தப்பியோடிய இளைஞர்கள் தமது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளனர். அவர்கள் விரைந்து சென்று இருவரையும் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். உறவினர்கள் அந்த இடத்திற்கு சென்ற போது சமூக விரோதக் கும்பல் மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்றுள்ளது.இச்சம்பவத்தில் வரணி இடைக்குறிஞ்சிமேற்குப் பகுதியை சேர்ந்த இளைஞர்களே படுகாயமடைந்துள்ளனர். அண்மைக் காலமாக இப்பகுதி ஊடாக பயணிக்கும் பொதும்க்களிடம் வழிப்பறி, கொள்ளை போன்ற செயல்களில் இந்தக் கும்பல் ஈடுபடுவதுடன் அதனை தட்டிக் கேட்பவர்கள் மீது தாக்குதலையும் மேற்கொள்கின்றனர். இதனால் இரவு வேளைகளில் இவ்வீதியை போக்குவரத்திற்கு மக்கள் பயன்படுத்துவதில்லை. அத்துடன் பகல் வேளையில் பயணிப்போரும் பெரும் பயப் பீதியுடனேயே செல்கின்றனர். கும்பலின் இச்செயற்பாடுகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள்வேண்டுகோள் விடுக்கின்றனர். இது தொடர்பாக நெல்லியடிபொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-103)

## குடும்பஸ்தரின் குடும்பத்துக்கு நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

அல்வாய் கிழக்கு கலட்டி மாயக்கை குளத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு மைக்கலின் நேசக்கரம் ஊடாக அவசரமாக 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

அல்வாய் மாயக்கை குளத்தில் மூழ்கி உயிரிழந்த தம்பிராசா சந்திரகுமாரின் குடும்பத்துக்கு அவசர உதவியாக சுவிட்சர்லாந்து நாட்டில் வாழ்ந்து வரும் கணபதிப்பிள்ளை குடும்பம் சார்பாக மகன் கண்ணன்50ஆயிரம் ரூபாவை நேற்று வழங்கி வைத்துள்ளார். (இ-7)

## கலை இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலகமும் உடுவில் பிரதேச கலாசார அதிகாரசபையும் இணைந்து நடத்தும் கலை இலக்கிய விழா எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தி.ஜெயக்காந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-9-105)




# ஆட்டோக்களுக்கு கட்டண மீற்றர் ஜனவரி மாதம் முதல் கட்டாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் ஆட்டோக்களுக்கு கட்டண மீற்றர் பொருத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் மாநகர முதல்வர் மற்றும் வட மாகாண போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பிரதி ஆணையாளர், மோட்டார் போக்குவரத்து திணைக்களப் பரிசோதகர், மோட்டார் போக்குவரத்து திணைக்களப் பொறுப்பதிகாரி நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை, பொறுப்பதிகாரி, அளவீட்டு நியமங்கள் பணியகம், தலைவர், செயலாளர், யாழ். மாவட்ட ஆட்டோ மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத் தலைவர், யாழ். பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம் போன்றோரின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் ஆட்டோக்கள் 01.01.2019 ஆம் திகதியிலிருந்து கட்டண மீற்றர் பொருத்தி சேவையில் ஈடுபடுவது கட்டாயமாக்கப்படுவதாக தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை அளவீட்டு நியமங்கள் பணியகத்தின் அறிவுறுத்தலுக்கமைய மீற்றர் பொருத்தும் நிறுவனத்தினை தெரிவு செய்து மிக விரைவாக கட்டண மீற்றர் பொருத்துதலை மேற்கொள்வதாக ஆட்டோ சங்கத்தினர் உறுதியளித்தனர்.

தேவையற்ற அலங்காரங்கள், கண்ணாடிகள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் அதிக ஒலிகளை ஆட்டோக்களில் பொருத்துவதை தவிர்க்குமாறும் யாழ். மாநகர எல்லைக்குள் சேவையிலீடுபடுபவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படுமெனவும் எதிர்காலத்தில் ஆட்டோ சாரதிகளுக்கான சீருடை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ-7)

## ஒரு இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் தண்டம்

# சுகாதாரமற்ற, அனுமதியற்ற உணவகங்களுக்கு சீல்வைப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் ரொனால்டால் உணவுச் சட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட ஒன்பது வழக்குகளில் குற்றம் உறுதி செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய இரு பலசரக்குக் கடைக்கும் நீதிமன்றத்தால் சீல் வைக்கப்பட்டது.

சுகாதாரமற்ற உணவு கையாளுகை, அனுமதிப் பத்திரமின்றிய உணவு உற்பத்தி, விற்பனை, சுகாதாரச் சீர்கேடான நிலையில் விற்பனைப்பகுதி, சுகாதாரமற்ற நிலையில் பேக்கரி உணவுப் பொருட்களை நடமாடும் வாகனங்களில் விற்பனை செய்தமை போன்ற குற்றங்களுக்காகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-60)

# மயானத்துக்கு எரிகொட்டகை அமைக்க மக்கள் கோரிக்கை



(வரணி)

மாசேரி கப்பத்தை இந்து மயானத்துக்கு இதுவரை காலமும் எரிகொட்டகை ஒன்று அமைக்கப்படாமையால் மக்கள், உடல்களை தகனம் செய்யும் போது பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

குறிப்பாக மழை காலங்களில் சடலங்களை எரிப்பதில் பிரச்சினையை எதிர் நோக்க வேண்டியுள்ளது. அதுமட்டுமன்றி வெயில் காலங்களிலும் பிரச்சினை ஏற்படுகின்றது. மேலும் கிரியை மண்டபமும் இடிந்து விழும் நிலையில் உள்ளது.

இது தொடர்பாக அரசியல் வாதிகள், அரச அதிகாரிகள் போன்றோருக்கு தெரியப்படுத்தியும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆகவே அடுத்த ஆண்டிலாவது மயானத்துக்கு எரிகொட்டகை அமைப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கையெடுப்பதோடு இடிந்து விழும் நிலையில் காணப்படும் கிரியை மண்டபத்தினை புனரமைத்துத் தருமாறு மக்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)



எம் எதிர்காலச் சந்ததியினரின் தூய வாழ்வுக்காய் எம் பயணம் எனும் கருப்பொருளின் கீழ் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினரால் மரநடுகை செயற்பாடானது அண்மையில் நடைபெற்றது. இளம் சமுதாயத்திற்கு இயற்கை மீதான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்குடனும் அதி வேகமாக பாலைவன தேசமாக மாறிடும் எம் மண்ணில் ஓர் பசுமைப் புரட்சிக்கு வித்திடும் நோக்குடன் ஆரம்பகட்டமாக நூறு மரக்கன்றுகள் நடப்பட்டன.

# ‘போதை நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு’ மாணவர்கள் விழிப்புணர்வு நடைபவனி



(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் பாவனையை எதிர்த்து யாழ்ப்பாணம் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலைய மாணவர்களால், விழிப்புணர்வு நடைபவனி ஒன்று நேற்று காலை முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் கோண்டாவில் பாடசாலையும் இணைந்து முன்னெடுத்த இந்த நடைபவனி நேற்று காலை கோண்டாவில் செபஸ்திரியார் வீதியில் ஆரம்பமாகி, வீரபத்திரர் ஆலய வீதி, வாகீஸ்வரி வீதி, கலைவாணி வீதி, தில்லையம்பதி ஆலய வீதி ஊடாக சென்று சென்று பாடசாலையை வந்தடைந்தது.

இந்த நடைபவனியில் கலந்து கொண்ட மாணவர்கள், குடி குடியை கெடுக்கும், நீ குடிக்கும் மது உன்னைக்கொல்லும், புகைத்தல் புற்று நோயை உண்டாக்கும்.பஞ்சமா பாதகங்களில் முதன்மையானது போதை, போதை நாட்டுக்கும் வீட்டுக்கும்கேடு போன்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு நடைபவனியில் கலந்து கொண்டனர். (இ-9)

# அனைத்து வாகனங்களிலும் றே லைட், எதிரொலிப்பான் பொருத்தப்பட வேண்டும்

## விபத்துக்களைத் தடுக்க பொலிஸார் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் பொலிஸாரால் பொது மக்களுக்கு விசேட அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக்காலமாக விபத்துக்கள் அதிகமாக இடம் பெற்று வருகின்றன. குறித்த விபத்துக்கான காரணங்களை நோக்கும் போது, துவிச்சக்கர வண்டி, டிப்பர், உழவு இயந்திரங்கள், போன்றன வாகனங்களில் றே லைட் (rear light), எதிரொலிப்பான் (reflector) பொருத்தப்படாதமையே விபத்துக்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகிறது.

எனவே அனைத்து சாரதிகளும் எதிர்காலத்தில் தமது வாகனங்களில் றே லைட் எதிரொலிப்பான் போன்றவற்றை பொருத்தும்படியும் பொருத்தத்தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கே.பாலித பெர்னாண்டோ அறிவித்துள்ளார். (இ-9)

# குளத்தில் குளிக்கத் தடை; அறிவித்தல் பலகை வைக்கவும்

அல்வாய் கிழக்கு மாயக்கை குளத்தில் குளிப்பதை தடை செய்யுமாறு அறிவித்தல் பலகை போடுமாறு அப்பகுதி பொது அமைப்புக்களிற்கும், கிராம உத்தியோகத்தருக்கும் கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்வாய் கிழக்கு மாயக்கை குளத்தில் குளிக்கச் சென்ற அதே இடத்தை சேர்ந்த தம்பிராசா சந்திரகுமார் என்ற குடும்பஸ்தர் நீரில் மூழ்கி மரண மடைந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கடற்படையினரின் சுழியோடிகளினால் சடலம் மீட்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணையினை மேற்கொண்டு சடலத்தை யாழ் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேலும் அக் குளத்தில் சிறுவர்களும் நீராடுவதாக மரணவிசாரணை அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து அக் குளத்தில் குளிப்பதற்கு தடை விதித்து அறிவித்தல் பலகை போடுமாறு அப்பகுதி பொது அமைப்புக்களிற்கும், கிராம உத்தியோகத்தருக்கும் அறிவுறுத்தினார். (இ-60)

### இனந்தெரியாத விசமிகளால்

# அம்மாச்சி உணவகம் அடித்து உடைப்பு!

(யாழ்ப்பாணம்)

கீரிமலையில் அமைந்துள்ள அம்மாச்சி உணவகம் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத விசமிகளால் அடித்து உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்தில் நேற்று முன்தினம் இரவு 10 மணி வரை வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தது.

அதன் பின்னரே குறித்த தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ள்ளது. இத்த தாக்குதலில் அம்மாச்சி உணவகத்தின் வெளிப்புற கண்ணாடியன்னல்கள்அடித்து உடைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதன் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-9)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உப அதிபராக
கடமையாற்றும் திரு.பொ. உதயராசா
அவர்களின் அன்பு சிறிய தந்தை (சித்தப்பா)

## திரு.சின்னத்தம்பி ஆறுமுகம்



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ பெரியபுலம் ம.வி. அதிபர், பிரதி அதிபர்,
ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.



அன்பு வாசகர்களே!
உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
076 636 3378






# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 15.10.2018 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவன்

## அமரர் சிவகுரு மகேந்திரராஜா



எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு ஒத்தாசைகள் புரிந்தோர், கண்ணீர் அஞ்சலி போஸ்டர்கள், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும் தொலைபேசி வாயிலாகவும் எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் மலர் வளையம் மற்றும் பிறவழிகளிலும் உதவிய எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். 14.11.2018 புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் (மனோன்மணி அம்மன் கோவில் அருகாமை) நடைபெறும்

ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் .

இல 131/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்



# கிளை பொதுச் சபைக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர் பட்டியல் தொடர்பானது

பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் அங்கத்தவர் பட்டியலில் இருந்து 31.10.2018 ஆம் திகதியில் உள்ளவாறாக கிளை பொதுச்சபைக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு 07.11.2018ஆம் திகதி தொடக்கம் 21.11.2018 ஆம் திகதிவரை சங்கத்தின் கிளை நிலையங்களிலும் தலைமைக் காரியாலயத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப்பட்டியல்களில் உள்ள பெயர் முகவரியில் வேறுபாடுகளிருப்பின் அல்லது பெயர் தவறப்பட்டிருப்பின் அல்லது ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் சங்கச் செயலாளரிடம் எழுத்து மூலம் 30.11.2018ஆம் திகதிக்கு முன் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம். (சி-4401)

# சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரப்பாவனை தொடர்பான வயல்விழா

(கிளிநொச்சி)

சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திர பாவனை தொடர்பான வயல் விழா கிளிநொச்சியில் நடைபெற்றது.

திருவையாறு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் திருவையாறு 2ஆம் பகுதியில் சிவக்கொழுந்து சந்திரேஸ்வரன் என்பவரின் தோட்டத்தில் நேற்று சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் பம்பியின் பாவனை தொடர்பாக விளக்கத்துடன் கூடிய வயல் விழா இடம்பெற்றது.

இவ் வயல்விழாவில் குழுமியிருந்தோருக்கு சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் பம்பியின் பாவனை தொடர்பாக குறித்த பயனாளி விளக்கமளித்திருந்தார்.



மாதாந்தம் 11 ஆயிரம் ரூபா மின்சாரக்கட்டணமாக செலுத்திவந்ததாகவும் தற்போது சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திர பாவனையின் பின்னர் ஆயிரம் ரூபா மட்டுமே செலுத்துவதாகவும் தெரிவித்திருந்தார்.

குறித்த பயனாளி மாற்றுத் திறனாளியாகவிருந்து ஆர்வமுடன் விவசாயத்தில் ஈடுபடுவதனால் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் 50வீத மானியத்தில் சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் நீர்ப்பம்பி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குழுமியிருந்த விவசாயிகளுக்கு இயந்திரங்களின் பாவனை மற்றும் தொழில்நுட்ப தகவல்களையும் வழிகாட்டல்களையும் பாடவிடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் விளக்கமளிக்கப்பட்டது.

இவ்வயல் விழாவில் கிளிநொச்சிமாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், பாடவிடய உத்தியோகத்தர்கள்,விவசாயப் போத னாசிரியர், விவசாயிகள் மற்றும் மாவட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட ஆர்வமுள்ள விவசாயிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் நீர்ப்பம்பியை 50% மானிய அடிப்படையில்பெற்றுக்கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியரிடமோ அல்லது நேரடியாக கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அலுவலகத்திலோ விண்ணப்பங்களை பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அறியத்தந்துள்ளார். (2)

# மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு

(பூநகரி)

கிளி/பூநகரி முக்கொம்பன் மகா வித்தியாலயத்தில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள் மற்றும் 100 புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் ஆகியோரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு மேற்படி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் த.பிரபாகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக பூநகரி கோட்டக்கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பா.சுரேஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-84)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பொருட்கள்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா இராசேந்திர குளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் தாய் இளைஞர் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க வன்னி மண் நற்பணி மன்றத்தினால் ஒரு குடும்பத்திற்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்கள் வீதம் 10 குடும்பத்திற்கு வழங்கி வைக்கப்பட்டன. (2-281)

# முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட நான்கு குளங்களில் வான் பாய்கின்றன

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன் கட்டு நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழுள்ள உடையார் கட்டு மற்றும் விசுவமடுக்குளம் உள்ளிட்ட நான்கு குளங்களில் வான் பாய்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன் கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள எட்டுக்குளங்கள் கடந்த வரட்சி காரணமாக நீர் மட்டங்கள் குறைவாகவே காணப்பட்டன.

கடந்த 7ஆம் திகதி பெய்த மழைகாரணமாக மேற்படி குளங்களின் நீர் மட்டங்கள் அதிகரித்துள்ளதுடன் நான்கு குளங்கள் வான் பாய்கின்றன.

இது தொடர்பில் முத்தையன் கட்டு நீர்ப்பாசனத்திணைக்களத்துடன்தொடர்பு கொண்டு வினவிய போது, உடையார் கட்டு குளத்தின் நீர் மட்டம் 23அடி5அங்குலமாகவும் மருதமடுக்குளத்தின் நீர் மட்டம் 14 அடி 3அங்குலமாகவும் விசுவமடுக்குளத்தின் நீர் மட்டம் 20அடி 4 அங்குலமாகவும் தட்டையர் மலை குளத்தின் நீர் மட்டம் 13 அடி 9 அங்குலமாகவும் உயர்வடைந்து முழுமையாக நீர் தேங்கி வான் பாய்கின்றன.

இது தவிர ஏனைய குளங்களான முத்துஐயன்கட்டுக் குளத்தின் நீர்மட்டம் 15 அடி 11 அங்குலமாகவும் கணுக்கேணிக்குளத்தின் நீர்மட்டம் 11 அடி 3 அங்குலமாகவும் தண்ணிமுறிப்புக்குளத்தின் நீர்மட்டம் 17 அடி 4 அங்குலமாகவும் மடவாளசிங்கன் குளத்தின் நீர்மட்டம் 15 அடியாகவும் உயர்வடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)




# மரநடுகை மாதத்தையொட்டி

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் மரக்கன்றுகள் நாட்டு நிகழ்வுகள்



(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை ஆரம்பிக்கும் முகமாக மரக்கன்றுகளை நாட்டும் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று பளை நகரப்பகுதி, பொது விளையாட்டு மைதானம், பொது இடங்கள் என்பவற்றில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



குறித்த கார்த்திகை மாதத்தில் ஆயிரம் மரக்கன்றுகளை நாட்டப்படும் என சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது எதிர்கால சந்ததிக்காக தங்கள் உயிரையே அர்ப்பணித்தவர்களின் வழித்தடங்களில் வந்த நாங்கள் எமது அடுத்த சந்ததிக்காக இதையாவது செய்யவேண்டும் என்றும் நாம் இன்று செய்ய தவறினால் இயற்கையாலும் அளிக்கப்படுவோம் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சபையின் உபதவிசாளர் கஜன், உறுப்பினர்களான வீரவாகு தேவர், நகுலேஸ்வரன், கோகுல்ராஜ், டயாழினி, றமேஸ், சுகந்தி, பிரேமிளா, அருள்ச்செல்வி, டிஷந்தன் மற்றும் சபையின் செயலாளர்செ.அனுசியா, மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# உந்துருளி விற்பனை நிலையத்தில் தீ! பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசம்




(கண்டாவளை)

கிளிநொச்சி நகரப் பகுதியில் கிளிநொச்சிக் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ள உந்துருளி விற்பனை நிலையத்தில் தீ விபத்தில் பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.



குறித்த மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு திடீரென ஏற்பட்ட தீயினால் பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

தீ விபத்து ஏற்பட்டதை அவதானித்த அயலவர்கள் உடனடியாகவே கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியதையடுத்து, பொலிஸார் மற்றும் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மற்றும் பிரதேச வர்த்தகர்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்டபோது கரைச்சிப்பிரதேச சபையின் தீயணைப்புப்பிரிவின் கால தாமதம காரணமாகவே தீயினைக்கட்டுப்படுத்துவதற்கு நீண்டநேரம் எடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் மற்றும் செயலாளரைத் தொடர்புகொண்டு வினவியபோது, குறித்த வர்த்தக நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளமை தொடர்பாக ஒரு மணித்தியாலங்களிற்குப்பின்னரே பொலிஸாரால் தமக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவல் கிடைத்தவுடன், சபையின் செயலாளர் கணேசன் கம்சநாதன் மற்றும் சபை உறுப்பினர் குமாரசிங்கம் உள்ளிட்டோர் சம்பவ இடத்திற்கு விரைந்து உடனடியாகவே பிரதேச சபையினாலும் பொலிஸாராலும் வர்த்தகராலும்தீக்கட்டுப்பாட்டிற்குள்கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் அவ்வாறான குற்றச்சாட்டுக்களில் எந்தவிதமான உண்மைகளும் இல்லையெனத் தெரிவித்துள்ளனர். (2-315-312)

# சட்டவிரோத மணல் அகழ்வு கட்டுப்பாட்டில்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதங்களில் சில மாதங்களாக பொலிஸார் முன்னெடுத்த விசேட நடவடிக்கைகள் மூலம் சட்டவிரோத மணல் அகழ்வுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும்சட்டவிரோத மணல் அகழ்வுகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துக்காணப்பட்டன.

அதேவேளை பயிர்ச்செய்கை நிலங்கள்,ஆற்றுப்படுக்கைகள் என்பவற்றில் இவ்வாறான மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

கிளிநொச்சி பன்னங்கண்டிப்பகுதியில் சட்டவிரோதமாக அகழ்ந்து களஞ்சியப்படுத்தப்பட்ட பெருமளவான மணல் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டு நீதிமன்றக்கட்டளைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


கடந்த இரண்டு மாதங்களில் கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப்பொலிஸ்மா அதிபர் தலைமையிலான விசேட பொலிஸ்குழுவினரும்ஏனைய பொலிஸாரும் தொடர்ந்து முன்னெடுத்த விசேட நடவடிக்கைமூலம் சட்டவிரோதமணல் அகழ்வுகள்,நிபந்தனைகளை மீறியமணல் அகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்ட அதிகளவானோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக தண்டிக்கப்பட்டதையடுத்து, கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

எதிர்காலத்திலும் இவ்வாறான மணல் அகழ்வுகள் இடம்பெறாமல் தடுக்க வேண்டுமென விவசாய மற்றும் பொதுஅமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (2-315)

# மனித புதைகுழி அகழ்வுப்பணி இருவார காலத்திற்கு நிறுத்தம்

(மன்னார்)

மன்னார் மனித புதைகுழியின் அகழ்வுப்பணி 105 ஆவது தடவையாக நடைபெறவிருந்த நிலையில், இரண்டு வார காலத்திற்கு அகழ்வுப்பணியானது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணியானது கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 104 ஆவது தடவையாக அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வார விடுமுறை என்பதனால் சனி மற்றும் நேற்று முன் தினம் இடம்பெறவில்லை.

இந்த நிலையில் 105 ஆவது தடவை அகழ்வுப் பணியானது இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் மனித புதைகுழி அகழ்வுப்பணியானது இடம் பெறவில்லை என அறிய முடிகின்றது.

அத்துடன் இரு வார காலத்திற்கு குறித்த அகழ்வுப் பணியானது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணியானது தொடர்ச்சியாக மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா மேற்பார்வையிலும் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையிலும் நடைபெற்று வருகின்றது

இதுவரையான அகழ்வுப் பணிகளின் முடிவின் படி

232இற்கு அதிகமான மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் 224 இற்கும் அதிகமான மனித எச்சங்கள் அப்புறப்படுத்தப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டு பொதி செய்யப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அடையாளப்படுத்தப்பட்டு இன்னமும் அப்புறப்படுத்தப்படாத மேலதிக மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணிகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றது.

இந்த நிலையில் முன் அறிவிதல் இன்றி திடீர் என அகழ்வுப் பணியானது இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அகழ்வுப்பணி நிறுத்தம் தொடர்பான எந்தவித அறிவுறுத்தல்களும் இதுவரை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-285)

# வவுனியாவில் 3வது நாளாகவும் கடும் பனிமூட்டம் தொடர்கின்றது



(குருமன்காடு)

சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் மூன்றாவது நாளாகவும் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாக வாகன சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் இருந்து காலை 8 மணி வரை வவுனியாவில் கடும் பனிப்பொழிவு காணப்படுவதுடன் குளிரான கால நிலையும் நிலவுகின்றது.

வவுனியாவில் கடும் மழை பெய்து வந்த நிலையில் தற்போது கடந்த மூன்று தினங்களாக பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏ-9 வீதியும் பனிமூட்டமாக காட்சியளித்தது. பனிமூட்டத்தால் காலையில் இவ் வீதி வழியாக பயணங்களை மேற்கொண்ட வாகனங்களின் சாரதிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

அத்துடன், பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் என மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது. (2-250)




# நிறுத்திவைக்கப்பட்ட உழவு இயந்திரத்தை மோதித்தள்ளியது இ.போ.சபை பேருந்து

## மூவர் படுகாயம்

(பூநகரி)

பூநகரி மாவட்டத்தில் உள்ள மண்டைக்கல்லாறு பாலத்திற்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் மன்னார் வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இ.போ. சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று மோதியதில் பேருந்தின் முன்பகுதி பலத்த சேதமடைந்ததுடன் உழவு இயந்திரத்திலிருந்த மூவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி மூலம் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.



இதன்போது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.பூலோகசிங்கம், மன்னாரைச் சேர்ந்தவர்களான இ.சந்திரகுமார், நா.ரவீந்திரன் ஆகியோரே படுகாயம் அடைந்தவர்களாவர்.

இச்சம்பவம் கடந்த 12 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பில் பூநகரி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் பேருந்தை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதுடன் சாரதியையும் விசாரணைக் குட்படுத்தியுள்ளனர். (2-84)

# உடைப்பெடுத்த நித்தகைக்குளம் 5 ஆயிரம் மண்மூடைகளைக் கொண்டு புனரமைப்பு





(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக உடைப்பெடுத்த குமுழமுனை நித்தகைக்குளத்தை இராணுவத்தினர், நீர்ப்பாசனத்திணைக்களத்தினர், கமநல சேவைகள் திணைக்களத்தினர் ஆகியோர் இணைந்து புனரமைத்துள்ளனர்.


முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 7ஆம் திகதி கொட்டித்தீர்த்த கன மழையை அடுத்த வெள்ளத்தைத் தொடர்ந்து மறுநாள் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு சிறிய குளங்கள் உடைப்பெடுத்திருந்தன.

இந்நிலையில் குமுழமுனை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள நித்தகைக்குளம் உடைப்பெடுத்திருந்தது.

மேற்படி குளத்தை முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் விவசாய அமைப்புக்களுடன் இணைந்து பாதுகாப்பு படைகளின்முல்லைத்தீவு மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் துசியந்த ராஜகுருவின் ஒழுங்குபடுத்தலில் 59 ஆவது படைப்பிரிவு மற்றும் 593 ஆவது படைப்பிரிவு ஆகிய படைப்பிரிவுகளைச் சேர்ந்த படையினர் சுமார் ஐயாயிரம் வரையான மண் மூடைகளைக் கொண்டு குறித்த குளத்தை புனரமைத்துள்ளனர். இதே வேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உடைப்பெடுத்துக் காணப்பட்ட கோடாரிக்கல் குளத்தையும் இவ்வாறு படையினர் புனரமைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-315)

# முதிரை மரக்குற்றிகளை ஏற்றி பயணித்த கனரக வாகனம் கைப்பற்று

## மூவர் தப்பியோட்டம்



(பூநகரி)

பூநகரி சங்குப்பிட்டி பாலத்திற்கு அண்மித்த பகுதியில் முதிரை மரக்குற்றிகளை ஏற்றிப் பயணித்துக் கொண்டிருந்த கனரக வாகனமொன்றை பூநகரி பொலிஸார் பின்தொடர்ந்து சென்ற போது வாகனத்தின் டயர்கள் காற்றுப்போன நிலையில் வாகனத்தை கைவிட்டு, சாரதியும் அதில் பயணித்தவர்களும் தப்பியோடினர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் பிற்பகல் 5.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பூநகரி காட்டுப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு முதிரைமரக் குற்றிகள் கடத்தப்படுவதாக பூநகரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த வாகனத்தை பொலிஸார் பின் தொடர்ந்த வேளை மேற்படி சம்பவம் நடைபெற்றுள்ளது. வாகனத்தையும் மரக்குற்றிகளையும் கைப்பற்றிய பூநகரி பொலிஸார் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதுடன் நீதிமன்ற நடவடிக்கைக்குட்படுத்தவுள்ளனர். அத்துடன் தப்பியோடிய நபர்களையும் கைது செய் யும் நடவடிக்கையில் பொலி ஸார் இறங்கியுள்ளனர். (2-84)

# 'மாயை' குறும்படம் வெளியீடு





(வவுனியா)

வவுனியாவில் இளைஞர்களின் முயற்சியில் உருவான மாயை என்னும் குறுந்திரைப்படத்தின் வெளியீட்டு நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் பூந்தோட்டம் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

BLITZ MUSIC UK தயாரிப்பில் 9D CREATION வழங்கும் குகதாசன் கோபிதாஸ் இயக்கத்தில் உருவான மாயை குறும்படத்தின் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் பண்டிதர் வீரசிங்கம் பிரதீபன், வவுனியா பொது வைத்தியசாலை வைத்தியர்களான மா.கலைச்செல்வன், செ.மதுரகன்,வவுனியா நகர சபை உறுப்பினர்களான த.பரதலிங்கம், பா.பா்லபிரசன்னா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர். மேலும் திரைப்படத்துக்கான மதிப்பீட்டுரையை த.சுதன் ஆசிரியர் வழங்கினார். (2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மஞ்சள்

Botanical Name:- Curcuma Longa

Family:- Zingiberaceae

Engl:- Turmeric



தமிழர்களின் வீடுகளிலம் சமையல் அறைகளிலும் மஞ்சளுக்கு சிறப்பான இடம் உண்டு. கிருமிநாசினியாக மஞ்சளைக் கரைத்து வீடு முழுவதும் தெளித்து நோய்க் கிருமிகளை இல்லாது ஒழிக்கும் வழக்கம் மிக நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. சமைக்கும் பொருளுக்கு நிறம் சேர்ப்பதற்காக மஞ்சள் பயன்படுத்தப்படுவதாகபலர் நினைக்கிறார்கள். ஆனால் உணவுப் பண்டங்களில் உள்ள நுண்ணிய நச்சுக் கிருமிகளை அழிப்பதற்காகவே மஞ்சள் சமையலில் பயன்படுத்தப்படுகிறது.

நிறைந்த மருத்துவக்குணம் கொண்ட மஞ்சள் தமிழர் வாழ்வின் மங்கலச் சின்னமாகவும் திகழ்கின்றது. இறைவழிபாட்டிலும் ஆன்மீகத்திலும் மஞ்சளுக்கு முக்கியத்துவம் உண்டு. ஒரு நல்ல காரியத்தைத் தொடங்கும் முன்னர் வினைகள் தீர்க்கும் விநாயகனை வணங்குவது நம் வழக்கம் ஆகும். பிள்ளையாரை சாணம் அல்லது மஞ்சள் கொண்டு பிடித்து அதில் அறுகம்புல் வைத்து வணங்குவதன் மூலம் மஞ்சளுக்கு உள்ள முக்கியத்துவம் நன்கு புலப்படுகிறது.

பெண்கள் நீராடும் போது மஞ்சளைக் குழைத்து உடலில் பூசுவார்கள். அதனால் அவர்களுக்கு கவர்ச்சியான உடல் நிறமும் தோல் பாதுகாப்பும் கிடைக்கும். மேலும் பளபளப்பான மேனி கிடைப்பதுடன் வியர்வை நாற்றம் நீங்கி உடலில் உரோம வளர்ச்சி தடைப்படுகிறது. ஆனாலும் மஞ்சள் பூசி நீராடும் வழக்காறு தற்காலத்தில் மிகவும் அருகி விட்டது.

குழந்தைப் பிரசவத்திற்கு பெண்களின் பத்திய உணவில் 'சரக்கு' அரைத்துக் கொடுக்கும் வழக்கமும் பெருமளவில் உண்டு. சரக்கு அரைத்து கொடுப்பதன் மூலம் கர்ப்பாசயத்து வலுவைக் கொடுப்பதோடு கர்ப்பாசய கழிவுகளை வெளியேற்றி தாய்ப்பாலை அதிகம் சுரக்கச் செய்ய முடியும். ஒரு சிறங்கை கொத்தமல்லி, அரை சிறங்கை நற்சீரகம், சிறிதளவு மிளகு, சிறுதுண்டு தேங்காய்ச் சொட்டு (துண்டு தேங்காய்), சிறுதுண்டு மஞ்சள் ஆகியவற்றை அம்மியில் வைத்து பட்டுப்போல் அரைத்து எடுக்க வேண்டும். தாச்சியில் போதியளவு நல்லெண்ணெய் விட்டுச் சூடாக்கி சிறுக நறுக்கிய கத்தரிப் பிஞ்சுகளை இட்டு வதக்கி வெந்து வரும் போது அரைத்து வைத்த சரக்கு, தேவையான உப்பு ஆகியவற்றைப் போட வேண்டும். சிறு இஞ்சித் துண்டு, வெங்காயம், உள்ளி ஆகியவற்றை தட்டிப் போட்டு இறக்கி சாற்றைக் குடிக்கக் கொடுப்பார்கள். மிகுதியை சோற்றுடன் உண்ணக் கொடுப்பார்கள்.

மேலும் 'காயம்' அரைத்துக் கொடுக்கும் வழக்கமும் உண்டு. மஞ்சள் ஒரு துண்டு, 1/2 சிறங்கை நற்சீரகம், சிறுதுண்டு வேர்க்கொம்பு ஆகியவற்றைத் தண்ணீர் சேர்க்காமல் (நல்லெண்ணெய் சேர்த்து) பசுந்தாக அரைத்து பனங்கட்டியுடன் 5 கிராம் அளவு தினம் இரு தடவை 5 நாட்களுக்கு கொடுப்பார்கள். எனவே பிரசவகால உணவு முறைகளில் மஞ்சளுக்கு மிக நெருங்கிய தொடர்பு உள்ளமை புலனாகிறது.

உடலை பொன்மயமாக்கி, துர்நாற்றத்தை போக்குகின்ற மஞ்சளினால் பசி உண்டாகும், பித்த கப வாத ரோகங்கள், தலைவலி, ஜலதோசம், ஐவகை வலிகள், வீக்கம், வண்டுக்கடி விசம் முதலியன நீங்கும்.

மஞ்சள் பல வருடங்கள் வளரக்கூடிய (80 செ.மீ. உயரம் வரை) குறுஞ் செடியாகும். இச் செடியில் மட்ட நிலத்தண்டு மருந்தில் பச்சையாகவும் உலர் மஞ்சளாகவும் பயன்படுத்தப்படுகின்றது. மஞ்சள் செடியை வீட்டில் வளர்த்தால் சுற்றுப்புறச் சூழலிலுள்ள மாசுக்களை அகற்றும். மஞ்சளில் விரலி மஞ்சள் அல்லது கறிமஞ்சள் மற்றும் கப்பு மஞ்சள் என இரண்டு வகை உண்டு. இரு வகை மஞ்சளும் ஒரே இனச் செடியில் விளைந்தாலும் உருண்டை வடிவ மட்ட நிலத்தண்டு கப்பு மஞ்சள் என்றும் விரல் வடிவ கிளை மட்ட நிலத்தண்டு கறி மஞ்சள் என்றும் அழைக்கப்படும்.

மேலும் கிழங்கின் பெரும் பாகங்களை எடுத்து உலர்த்தி நல்லெண்ணெயில் பக்குவம் செய்தால் அது கப்பு மஞ்சள் என்றும் கிழங்கின் பக்கங்களில் கிளைக்கும் விரல் போல் உள்ளவற்றை வேறுபடுத்தி சாணப்பாலில் வேகவைத்து பக்குவப்படுத்தினால் அது கறிமஞ்சள் எனவும் பாரம்பரியமாக பயன்படுத்தி வந்தார்கள்.

கைப்பும் கார்ப்பும் மஞ்சளின் சுவைகளாகும். ஆட்டு வாய்வகற்றல், வெப்பம் உண்டாக்குதல் ஆகியவை மஞ்சளின் செய்கைகளாகும்.

இடித்து வடிகட்டிய மஞ்சள்தூளை புண்கள் மேல் தூவினால் அவை விரைவில் குணமடையும். சேற்றுப் புண், நீரினால் வரும் புண்கள் ஆகியவற்றை மஞ்சள் துள் பூசுவதால் குணப்படுத்தலாம்.

பச்சைமஞ்சள் கிழங்கை இடித்து சாறு எடுத்து அச் சாற்றை புண், வீக்கம், நச்சுப்புண் ஆகியவற்றின் மேல் பூசினால் அவை விரைவில் குணமடையும்.

மஞ்சளை சுட்டு முகர்ந்தால் நீரேற்றம், தலைப்பாரம் தீரும்.


டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

அம்மைக் கொப்பளங்கள் மேல் வேப்பிலையுடன் சேர்த்து அரைத்த மஞ்சளைப் பூசிவர விரைவில் குணமாகும்.

மஞ்சள் நீரில் நனைத்து நிழலில் உலர்த்திய வெண் சீலைத் துண்டால் கண் நோய் உள்ளவர்கள் கண்களை துடைத்துவர கண் சிவப்பு, கண்வலி ஆகியவை தீரும்.

மஞ்சள், பச்சைப்பயறு, கடலைப்பருப்பு ஆகியவற்றை சமமாக எடுத்து அரைத்து பொடியாக்கி குளிக்கும் போது உடலுக்கு தேய்த்துவர உடல் தோல் மென்மையடையும். தோலிலுள்ள இறந்த, தேவையற்ற தோற்பாகங்கள் நீங்கும். தோல் புதுப்பொலிவு பெறும்.

# ஜனநாயக உரிமையை அவமதித்த ஜனாதிபதி

## யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

ஜனாதிபதி தமிழ் மக்களை மாத்திரம் அவமதிக்கவில்லை. சிங்கள சகோதரர்கள் கொடுத்த ஜனநாயக உரிமையையும் அவமதித்துள்ளார் என யாழ்.மாநகரசபை முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற மாமனிதர் ரவிராஜின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்ற போது எங்கள் கட்சியின்தலைமை தந்தை செல்வா மிகத் தீர்க்க தரிசனத்தோடு கட்சியின் பிரமாணங்கள், செயற்பாடுகளை தெட்டத் தெளிவாகக் கூறினார். அத்தோடு வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதையும் கூறினார். அதன் பின்னர் தமிழரசை தலைமை தாங்கி வந்த தலைமைகள் 1949 இல் இருந்து இன்று வரை விலைபோகாத தலைவர்கள் என்பதை நிலைநாட்டியுள்ளனர். தந்தை செல்வாவும் அதன் பின்னர் வந்தவர்களும் கூறியிருக்கிறார்கள் மாறி மாறி வருகின்ற ஒவ்வொரு அரசும் எம்மை ஏமாற்றி வருகின்றன என்று. நாங்கள் இரண்டு ஒப்பந்தங்களை இரண்டு தேசிய கட்சிகளோடு செய்யும் போது அது இரவோடு இரவாக கிழித்து எரித்து எறியப்பட்டது. இவர்களை நம்பி நடந்ததால் தேசிய அரசாங்கம் கூட எமது அபிலாஷைகளை அடியோடு நிராகரித்து மண்ணோடு மண்ணாக குழி தோண்டிப் புதைக்கின்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஜனாதிபதியை எவ்வாறு, ஏன் ஆட்சிக்கு கொண்டு வந்தோம் என்று கூறவிரும்பவில்லை. ஆனால் யார் வரக்கூடாது என்று சொல்லிக்கொண்டு ஆட்சிப் பீடம் ஏறினாரோ மீண்டும் அவ்வாறான கொடூரமான ஒருவரை ஆட்சியில் கொண்டு வந்து சேர்த்துள்ளார். அரச தலைவர் தமிழ் மக்களை மட்டுமல்ல சிங்கள சகோதரர்கள் கொடுத்த ஜனநாயக உரிமையையும் அவமதித்துள்ளார். அவ்வாறான ஒரு கருமத்தைச் செய்த ஜனாதிபதி தொடர்ச்சியாக 19 ஆவது திருத்தச்சட்ட விதிகளை மீறி வருகிறார். இந்தச் சட்டத்தை ஏன் உருவாக்கினார்கள் என்ற கேள்வி இன்று கேட்கப்படுகிறது. இந்தப் 19 ஆவது திருத்தச் சட்டத்தாலும் ஒரு ஜனாதிபதியைக் கட்டுப்படுத்த முடியாமல் அவர் தான் தோன்றித்தனமாகச் செய்யும் செயல்களை எம்மால் ஜீரணிக்க முடியாதுள்ளது. இரவோடு இரவாக விநோதமாக அமைச்சு மாற்றப்பட்டு, அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு. தற்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் ஒன்றிற்கு அழைப்பு விடுகப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் எங்களுக்கு வரப் போகின்ற அபிலாஷைகள், சர்வதேசம் தரப்போகின்ற அத்தனை கருமங்களையும் அடியோடு புதைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பேரினவாத சக்திகளின் செயற்பாடாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

ஒரு இனத்தினுடைய இருப்பை இல்லாமல் ஆக்குவதற்காக பிரிந்து கிடக்கின்ற அத்தனை சக்திகளும் ஒன்று பட்டு எங்களுடைய இனத்தை நசுக்குகின்றனர். ஒரு இனமாக சிங்கள தேசத்தை எதிர்க்க ஒற்றுமைப்படாமல் பல்வேறு துண்டுகளாக பிரிந்து எங்கள் சுயலாப அரசியலுக்காக எங்களைத் தயார்படுத்துகிறோம். இது அதற்கான தருணம் அல்ல. உச்சக்கட்ட ஜனநாயக தேர்தலை சந்திக்க வேண்டிய தருணத்தில் இருக்கிறோம். இந்த ஜனநாயக தேர்தலை நாம் ஒற்றுமையோடு தமிழ் தேசியத்தின் ஆணையைக் கொடுத்து மீண்டும் ஒரு தடவை எங்கள் இருப்பை சிங்கள தேச தலைமைகள் இடத்தில் நிரூபிக்க வேண்டிய நிலையிலுள்ளோம். பெரும்பான்மை பலத்தை மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டியவர்களாகவுள்ளோம்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# நாமல் குமார "மொட்டில்" போட்டி



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கீழ் போட்டியிடுவதற்கு தான் தீர்மானித்துள்ளதாக, ஊழலுக்கு எதிரான இயக்கத்தின் செயற்பாட்டு இயக்குநர் நாமல் குமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும், இதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆசி வழங்கியதாகவும் நாமல் குமார தெரிவித்துள்ளார்.

சூழலைப் பாதுகாக்கவும் ஊழல், மோசடியற்ற நாட்டை உருவாக்கவுமே தான் தேர்தலில் போட்டியிட தீர்மானித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை படுகொலை செய்வதற்கான சூழ்ச்சி தொடர்பில், நாமல் குமாரவே ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வவுச்சர் முறையால் வருடாந்தம் 546 மில்லியன் மேலதிக செலவு

## அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்

(கொழும்பு)

வவுச்சர் முறையில் பாடசாலை சீருடை விநியோக நடவடிக்கை மேற்கொண்டதில் கடந்த வருடத்தில் மாத்திரம் 546 மில்லியன் ரூபாய் மேலதிகமாக செலவிடப்பட்டுள்ளதாக கல்வி, உயர் கல்வி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதனைக் கருத்திற் கொண்டு பாடசாலை சீருடை வழங்குவதில் பழைய முறைமையை நடைமுறைப்படுத்துவதே பொருத்தமானது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு பெரும் தொகை நிதியை செலவிட்டு வவுச்சர் முறையில் பாடசாலை சீருடைகளை வழங்குவதை விடுத்து பழைய முறையிலேயே அதனைச் செயற்படுத்த தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கிணங்க பழைய முறையில் பாடசாலை சீருடை வழங்குவது தொடர்பில் அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கேகாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய முறையில் சீருடைகளை வழங்குவதற்கு கடந்த அரசாங்கம் தீர்மானித்ததால் எமது நாட்டிலுள்ள புடைவை உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

வெளிநாடுகளிலிருந்து அதற்கான துணிகளை இறக்குமதி செய்வதற்கு ஆயிரத்து 44 மில்லின் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. நூல்கள் இறக்குமதி செய்து துணிகளை இங்கு உற்பத்தி செய்திருந்தால் இந்த செலவை வெகுவாகக் குறைத்திருக்க முடியும். இதனை சீர்செய்யும் வகையிலேயே தற்போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# ‘பிஸ்னஸ் டுடே’ வர்த்தக விருது விழா ஜனாதிபதி மைத்திரியின் தலைமையில்





(கொழும்பு)

இலங்கை வர்த்தக துறையில் விசேட அடைவுகளை வெளிப்படுத்தியுள்ள நிறுவனங்களை பாராட்டும் "பிஸ்னஸ் டுடே 2018" வர்த்தக விருது விழா நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு, சங்ரில்லா ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டதுடன், சிறந்த வர்த்தக நிறுவனங்களை பாராட்டி விருதுகளையும் ஜனாதிபதி வழங்கினார்.


"பிஸ்னஸ் டுடே டொப் 30" என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விருது விழாவில் வர்த்தக துறையில் 2017, 2018 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க அடைவுகளை வெளிக்காட்டிய 30 வர்த்தக நிறுவனங்கள் பாராட்டப்பட்டன.

தேசிய பொருளாதாரத்தில் நம்பிக்கை வைத்து நாட்டின் எதிர்காலத்திற்காக தொடர்ச்சியாக தமது தனிப்பட்ட முதலீடுகளை மேற்கொண்டுள்ள கீர்த்திமிக்க தனிநபர்களும் இதன்போது பாராட்டை பெற்றனர்.

இலங்கை வர்த்தகத் துறையில் முக்கிய அடைவுகளை வெளிக்காட்டிவரும் நிறுவனங்களைப் பாராட்டி அரச தலைவரின் தலைமையில் இடம்பெறும் இந்த வர்த்தக விருது விழா பிஸ்னஸ் டுடே சஞ்சிகையினால் வருடாவருடம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் வர்த்தக துறை முக்கியஸ்தர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

கேலிச்சித்திரம்



# பிரதி சுங்க பணிப்பாளருக்கு எதிராக மனுக் கையளிப்பு



(கொழும்பு)

இலங்கை சுங்கத்தில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதாக குற்றம் சுமத்தி நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு உள்ளிட்ட மேலும் சில அமைப்புக்கள் நேற்று சுங்க பணிப்பாளரிடம் மனுவொன்றை கையளித்துள்ளன.

இவர்கள் சுங்க அலுவலகத்திற்கு முன்னால் எதிர்ப்பில் ஈடுபட்ட நிலையில் பிரதி சுங்க பணிப்பாளர் சுதத் டி சில்வா மற்றும் எதிர்ப்பாளர்களுக்கிடையில் பதற்ற நிலை ஏற்பட்டது.

எதிர்ப்பாளர்கள் நேற்று முன்தினம் நண்பகல் சுங்க அலுவலகத்திற்கு முன்னால் வந்து சுமார் ஒரு மணித்தியாலம் இவ்வாறு எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

# 82 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணபொதுச்சேவைகள் ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகத் தேர்வில் தெரிவானவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே வழங்கினார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இந்த நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று காலை இடம் பெற்றது.

முகாமைத்துவ உதவியாளர்கள், விவசாய போதனாசிரியர்கள், பயிற்சியாளர்கள், கடல்நீர் வளத்துறை போதனா ஆசிரியர்கள் என மொத்தம் 82 பேருக்கான நியமனக் கடிதங்களை ஆளுநர் வழங்கினார்.

இதில் ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன், உதவிச் செயலர் ஏ.எக்ஸ் செல்வநாயகம்.விவசாய அமைச்சின் செயலர் க.தெய்வேந்திரம், பதில் பிரதம செயலாளர் சரஸ்வதி மோகனதாஸ், இ.வரதீஸ்வரன்,மாகாண சபை செயலாளர், ரூபினி வரதலிங்கம்,மகளிர் விவசாய அமைச்சு, வடமாகாண திணைக்கள ஆணையாளர்கள், அதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்



(கொழும்பு)

கொழும்பு டி செய்சா மகளிர் வைத்தியசாலையில் பெண்ணொருவர் ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

இந்தக் குழந்தைகளின் பெற்றோர் இலங்கை விமானப் படையில் பணிபுரிவதாக தெரியவந்துள்ளது.

தம்பதிகளான கோப்ரல் அயேசா தில்ஹானி மற்றும் கோப்ரல் தாரின் லக்மாலுக்குமே இந்த குழந்தைகள் பிறந்துள்ளன.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இருவரும் திருமணம் செய்து கொண்டிருந்த நிலையில், குழந்தைக்காக காத்திருந்தனர்.

இந் நிலையில் கடந்த 5 ஆம் திகதி சத்திர சிகிச்சை ஊடாக இந்த குழந்தைகள் பிறந்துள்ளன.

அவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகளும், இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




சங்கானை பொது நூலகத்தினால் “மக்களிடையே அறிவுத்திறனை வளர்ப்பது வாசிப்பு” என்ற விடயம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

# பாரதம்

## பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றத் திட்டம்

### அமைச்சர் ஜெயக்குமார் தெரிவிப்பு



பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்குவதற்குத் தமிழக அரசு ஆலோசித்து வருவதாக அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை, கிண்டியில் மத்திய வேளாண்துறை அமைச்சர் ராதாமோகன் சிங்குடன் அமைச்சர் ஜெயக்குமார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மத்திய அரசிடம் இருந்து கிடைக்க வேண்டிய நிலுவைத்தொகை, திட்டங்கள் தொடர்பாக ஆலோசனை நடத்தியதுடன், மீனவர்களை எஸ்.டி. பிரிவில் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை மனுவையும் அளித்தார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் ஜெயக்குமார் மேலும் தெரிவிக்கையில், "பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்க அரசு ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றது. இது தொடர்பான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் இயற்கை அனர்த்தங்களைச் சந்திப்பதற்குத் தேவையான சகல முன்னேற்பாடான செயற்பாடுகளும் தயாராக இருக்கின்றன. அதனை எதிர்கொள்ள தமிழக அரசு எப்போதும் தயாராக உள்ளது.

அத்துடன், மீன்பிடித் துறைமுகங்கள் அமைப்பதற்காக ரூ.1000 கோடியை மத்திய அரசிடம் கேட்டுள்ளோம். இதன் மூலம் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதே எமது இலக்கு" என அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## ஏமனில் கடு...

## 150 பேர் உ...



(ஹொடெய்தா)

ஏமன் நாட்டின் ஹொடெய்டா பகுதியில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி ஆதரவாளர்களுக்கும் இடையில் நிகழ்ந்த மோதலில் பலி எண்ணிக்கை 150 ஆக உயர்ந்துள்ளது.

ஏமனின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றும் செங்கடல் துறைமுக நகருமான ஹொடெய்டா கடந்த 4 ஆண்டுகளாக கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ளது.

இந்த நகரை அவர்களிடம் இருந்து மீட்டெடுக்க ஜனாதிபதி ஆதரவுப் படையினர் கடந்த ஒரு வார கால

## அலோக்வர்மாவின் விசாரணை அறிக்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல்



சி.பி.ஐ. முன்னாள் இயக்குநர் அலோக் வர்மா மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை அறிக்கையை மத்திய ஊழல் ஒழிப்பு கண்காணிப்பகம் உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்டது.

சி.பி.ஐ. இயக்குநர் அலோக் வர்மா, சிறப்பு இயக்குநர் ராகேஷ் அஸ்தானா ஆகியோர் இடையே கடும் மோதலிருந்து வந்த நிலையில், ராகேஷ் அஸ்தானா 3 கோடி ரூபாய் இலஞ்சம் பெற்றதாக அவர் மீது சி.பி.ஐ. வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில் தன்னை பதவி நீக்கம் செய்ததை எதிர்த்து அலோக் வர்மாவால் உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

அலோக் வர்மா மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக நீதிபதி பட்நாயக் மேற்பார்வையில் மத்திய ஊழல் தடுப்பு குழு ஒன்றை நியமித்து, கடந்த 26-10-2018 உயர் நீதிமன்றத்தில் உத்தரவிட்டிருந்தது. இரண்டு வாரங்களுக்குள் விசாரணையை முடித்து உயர் நீதிமன்றத்தில் விசாரணை அறிக்கையை சீலிட்ட உறையில் வைத்து தாக்கல் செய்ய வேண்டுமென நிபந்தனையும் விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், விசாரணை அறிக்கையை ஊழல் தடுப்பு கண்காணிப்பு குழுவின் சட்டத்தரணி துஷார் மேத்தா நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். குறித்த அறிக்கையைபதிவுசெய்துகொண்ட தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், நீதிபதி எஸ். கே. கவுல் ஆகியோரை கொண்ட அமர்வு மறுவிசாரணையை நாளை மறுதினம் ஒத்திவைத்துள்ளது. (4-7)

### ரோஹிஞ்யா மீது வன்முறை

## ஆங்சான் சூகியிடமிருந்து மீளப் பெறப்பட்ட உயரிய விருது



மியன்மார் தலைவர் ஆங்சான் சூகிக்கு வழங்கப்பட்டிருந்த மனித உரிமைகளுக்கான மிக உயரிய விருதை சர்வதேச மன்னிப்பு சபை திரும்பப் பெற்றுள்ளது.

ரோஹிஞ்யா முஸ்லிம் சிறுபான்மையின மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் குறித்து பேசாது, மனித உரிமைகளை மீறியதாக ஆங் சான் சூகி மீது குற்றம் சாட்டி இவ் உயரிய விருது திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்பு சபை நேற்று (செவ்வாய்க்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் குறித்து பேசாது, படையினரை பாதுகாக்கும் செயற்பாட்டில் ஆங்சான் சூகி ஈடுபட்டுள்ளார்.

முன்பு ஜனநாயகத்திற்காக பாடுபட்ட ஆங்சான் சூகியின் தற்போதைய செயற்பாடானது, வெட்கக் கேடான காட்டிக் கொடுக்கும் செயலாகும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனநாயக போராட்டத்தில் புகழ் பெற்ற ஆங்சான் சூகி, தொடர்ச்சியாக பல சர்வதேச விருதுகளை பெற்றதுடன், சர்வதேச மனித உரிமைகள் குழு இவரை 2009ஆம் ஆண்டின் தமது நல்லெண்ண தூதுவராக நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## துருக...
## 5 பே...

15...

(இஸ்தான்...

துருக்கியி... கடற்கரைப்பகு... ஒன்று கவிழ்ற... க்குள்ளானதில்... ரிழந்துள்ளதுட... பாதுகாப்பாக ... ள்ளனர்.

ஐரோப்பிய... நோக்கி புகலி... கையாளர்கள்... படகு ஒன்றே... துள்ளதாக சர்...

## சுவிட்சர்லாந்தில் வைரம் ரூபாய் 370 கோடிக்கு ஏலம்



(ஜெனீவா)

சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவா நகரில் மிக அழகிய இளஞ்சிவப்பிலான வைரக்கல் ரூ.370 கோடிக்கு ஏலம் போனது.

சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவா நகரில் மிக அழகிய இளஞ்சிவப்பு வைரக்கல் ஏலம் நடைபெற்றது. இதை கிறிஸ்டி ஏல மையம் நடத்தியது.

10 கரட் எடை கொண்ட இந்த வைரக்கல் சுமார் ரூ.370 கோடிக்கு (50 மில்லியன் டொலர்) ஏலம்போனது. இது நீள் சதுரவடிவம் கொண்டது. பளிச்சென்ற இளஞ்சிவப்பு நிறம் கொண்டது.

இந்த வைரத்தை பலர் போட்டி போட்டு ஏலம் கேட்டனர். முடிவில் ஒருவர் அதிக விலை கொடுத்து வாங்கினார். அவரின்பெயரை வெளியிட கிறிஸ்டி ஏல மையம் மறுத்து விட்டது.

கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1920ஆம் ஆண்டு தென் ஆபிரிக்க சுரங்கத்தில் இது கண்டு பிடிக்கப்பட்டது. பொதுவாக வைரங்கள் வெள்ளை நிறத்தில்தான் இருக்கும். ஆனால் இந்த வைரம் அரிய இளஞ்சிவப்பு நிறத்தில் ஜொலிக்கிறது. (4-7)

## கலிபோர்னியாவில் காட்டுத்தீ; உயிரிழப்பு 45 ஆக அதிகரிப்பு



(கலிபோர்னியா)

அமெரிக்காவின் கலிபோர்னிய மாநிலத்தில் மிகக் கொடூரமாகப் பரவி வரும் காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 42ஆக உயர்வடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காட்டுத்தீயினால் பேரழிவுக்கு உள்ளான கலி போர்னிய மாநிலத்தின் வட பகுதியிலுள்ள பரடைஸ் நகரிலிருந்து 11 பேரது சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையிலேயே உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னிய மாநில வரலாற்றில் ஏற்பட்ட மிகக் கொடூரமான காட்டுத் தீயாக இது விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இங்கு நிலைமை மிகவும் தீவிரமடைந்துள்ளமையால் வெளியேற்ற உத்தரவுகள் வெளியாகும் வரை காத்திருக்காது. அங்கிருந்து வெளியேறுமாறு லொஸ் ஏஞ்சல்ஸ் தீயணைப்பு துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (4-7)

## காசா...
## 3 பல...

(காசா)

காசா எல்... படையினர் நடத்... தல்களில் மூன்... கொல்லப்பட்ட... யமடைந்துள்ள...

பலஸ்தீனிய... ரொக்கெட் தாக்... லியாக நேற்று ... கிழமை மாலை... னரின் விமான... கேறியுள்ளது.

காசாவில் இ... லின் இரகசிய... போது ஏழு பல... ளர்களும், ஒரு... கொல்லப்பட்டன...

இச்சம்பவத்... வில் இஸ்ரேல்...



# வெளிநாடு

# டும் மோதல்!
# உயிரிழப்பு



மாக அங்கு கடுமையாக போரிட்டு வருகின்றனர்.

இரு தரப்புக்குமான இந்தப் போரில் அப்பாவி மக்களும் சிக்கி பலியாகி வருகின்றனர். இதில் நேற்று மட்டும் 40 பேர் பலியாகினர்.

அங்கு தொடர்ந்து போர் நீடித்து வரும் நிலையில் பலி எண்ணிக்கை 150 ஆக உயர்ந்துள்ளது. இறுதியாக கிடைத்த தகவலின்படி 110 கிளர்ச்சியாளர்கள், ஜனாதிபதி ஆதரவு படையினர் 32 பேர் மற்றும் அப்பாவி மக்கள் 8 பேர் என 150 பேர் இந்த போரில் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது. (4-7)

# தற்கொலைப் படைத்தாக்குதல் 6 பேர் உடல் சிதறி உயிரிழப்பு
## 20 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்



(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள பாடசாலையின் அருகே இன்று தலிபான் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் 6 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் சிறுபான்மை இனத்தவர்களான ஹஸ்ரா பழங்குடியின மக்களுக்கு எதிராக நாளுக்கு நாள் போர் அதிகரித்து வருகிறது.

தலிபான் பயங்கரவாதிகளின் தாக்குதல்களை கட்டுப்படுத்த தவறிய அரசை கண்டித்தும், பாதிப்பு அதிகமாக உள்ள பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு வலியுறுத்தியும் கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவில் இருந்து மாணவர்களும், பொது மக்களும் காபூல் நகரில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், போராட்டக்காரர்கள் அதிகம் குவிந்திருந்த இஸ்திக்லால் பாடசாலையின் அருகே தலிபான்களின் தற்கொலைப் படையை சேர்ந்த மனித வெடிகுண்டு நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 6 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

இருபதுக்கும் அதிகமானவர்கள் பலத்த காயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (4-7)

# துருக்கியில் படகு கவிழ்ந்து விபத்து
# 5 பேர் உயிரிழப்பு; 5 பேர் மாயம்
## 15 பேர் பாதுகாப்பாக மீட்பு

(இஸ்தான்புல்)

துருக்கியின் மேற்கு ...ற்கரைப்பகுதியில் படகு ...ன்று கவிழ்ந்து விபத்து ...தள்ளானதில் ஐவர் உயி...ழந்துள்ளதுடன், 15 பேர் ...துகாப்பாக மீட்கப் பட்டு ...ளனர்.

ஐரோப்பிய நாடுகளை ...நாக்கி புகலிடக் கோரிக்...கையாளர்கள் பயணித்த ...டகு ஒன்றே கவிழ்ந்...ள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் மூன்று சிறுவர்கள் உள்ளடங்குவதாகவும், ஐவர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போனவர்களை தேடும் பணியில் மீட்புப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

புகலிடக்கோரிக்கையாளர்கள் பயணித்த படகு மூழ்குவதை அவதானித்த உள்ளூர் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்களே இவ்வாறு நீரில் மூழ்கியவர்களை போராடி காப்பாற்றியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, அண்மைக்காலமாகவே ஐரோப்பிய நாடுகளை நோக்கி பயணிக்கும் போது உயிரிழக்கும் புகலிடக்கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்த 2 ஆயிரத்து 382 இந்தியர்கள் சிறையில் அடைப்பு

(வோஷிங்டன்)

உரிய அனுமதி இல்லாமல் அமெரிக்காவுக்குள் நுழைந்ததாக 2382 இந்தியர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் தகவல் அறியும் சுதந்திர ஊடகம் மூலம் தெரிய வந்துள்ளது



அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்ற பின்னர் அங்கு வெளிநாட்டினருக்கு குடியுரிமை அளிக்கும் விவகாரத்தில் மிகுந்த கட்டுப்பாடுகளை விதித்துள்ளார். அயல் நாடான மெக்சிகோ நாட்டு எல்லை வழியாக அமெரிக்காவில் அடைக்கலம் தேடி வரும் மக்கள் கைது செய்து சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.

இந்நிலையில், உரிய அனுமதி இல்லாமல் அமெரிக்காவுக்குள் நுழைந்ததாக 2382 இந்தியர்கள் கைது செய்யப்பட்டு அந்நாட்டில் உள்ள 86 சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதாக தகவல் அறியும் சுதந்திர ஊடகம் மூலம் தற்போது தெரியவந்துள்ளது. வடஅமெரிக்காவில்வாழும் பஞ்சாபிகள் சங்கம் மூலம் பெறப்பட்ட இந்த தகவலின் அடிப்படையில் இவர்களில் பெரும்பாலானவர்கள் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தவர்கள். சொந்த நாட்டில் வன்முறை மற்றும் அடக்குமுறைக்கு பயந்து இவர்கள் அனைவரும் அமெரிக்காவில் தஞ்சம் அடைய வந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

30 முதல் 35 இலட்சம் ரூபாய் கொடுத்தால் அமெரிக்க குடியுரிமை பெற்று தருவதாக போலி வாக்குறுதி அளிக்கும் சில தரகர்களின் மாய வலையில்விழும்இந்தியர்கள் இங்கு அடைக்கலம்தேடி வந்து குடியுரிமைத்துறை அதிகாரிகளிடம் பிடிபட்டு, சிறையில் அடைபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

# காசா எல்லையில் வன்முறை
# 3 பலஸ்தீனியர்கள் உயிரிழப்பு

(காசா)

காசா எல்லையில் இஸ்ரேல் ...டயினர் நடத்திய விமான தாக்கு...களில் மூன்று பலஸ்தீனியர்கள் ...ால்லப்பட்டதுடன், பலர் படுகா...டைந்துள்ளனர்.

பலஸ்தீனியர்கள் நடத்திய பாரிய ...க்கெட் தாக்குதல்களின் எதிரொ...ாக நேற்று முன்தினம் திங்கட்...மை மாலை இஸ்ரேல் படையி...ின் விமானத் தாக்குதல் அரங்...றியுள்ளது.

காசாவில் இடம்பெற்ற இஸ்ரே...ன் இரகசிய நடவடிக்கையின் ...து ஏழு பலஸ்தீன கிளர்ச்சியா...களும், ஒரு இஸ்ரேல் வீரரும் ...ால்லப்பட்டனர்.

இச்சம்பவத்தை அடுத்து காசா...ல் இஸ்ரேல் படையினருக்கும் பலஸ்தீன கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே வன்முறை வெடித்தது.

இதன்போது, பலஸ்தீன் கிளர்ச்சியாளர்கள் இஸ்ரேல் மீது 300 றொக்கெட் மற்றும் மோட்டார் குண்டு தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலில் பேருந்தொன்று தீக்கிரையானதுடன், அருகிலிருந்த இஸ்ரேல் படை வீரர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து, பலஸ்தீன் கிளர்ச்சியாளர்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் படையினர் 70 விமான தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதில் மூன்று பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதுடன், அவர்களில் இருவர் பலஸ்தீன் கிளர்ச்சியாளர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# பெருவிற்கும் ஸ்பெயினிற்கும் இடையே இரு தரப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை

பெருவிற்கும், ஸ்பெயினிற்கும் இடையே இருதரப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பெரு ஜனாதிபதி மார்டின் விஸ்காரா மற்றும் ஸ்பெயின் மன்னர் ஆறாவது ஃபெலிப் ஆகியோரது தலைமையில், இருநாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்களிடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.




ஸ்பெயின் மன்னர் ஆறாவது ஃபெலிப்பின் பெருவிற்கான முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது நேற்று முன்தினம் திங்கட்கிழமை இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பெருவிற்கான முதலாவது உத்தியோகபூர்வ விஜயமாக ஸ்பெயின் மன்னர் ஆறாவது ஃபெலிப், தனது பாரியாருடன் தலைநகர் லிமாவை சென்றடைந்தார்.

பெருவிற்கு விஜயம்செய்த ஸ்பெயின் மன்னருக்கு, லிமா அரச மாளிகையில் பெரு ஜனாதிபதி மார்டின் விஸ்காரா தலைமையில் பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரச மாளிகையில் வைத்து இவ் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய பெரு ஜனாதிபதி, இந்த உடன்படிக்கையானது எமது இரு நாடுகளுக்கும் இடையிலான ஐக்கியத்தை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இது ஒரு வலுவான உறவை வெளிப்படுத்துவதுடன், இந்த உறவு தொடர்ந்து நீடிக்க வேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். (4-7)

## பிரதமராக்கிய நன்றிக் கடனுக்காக

# மைத்திரியை அரசியல் ரீதியாக மகிந்த கொலை செய்துள்ளார்

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தனக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட சன்மானத்துக்கு பிரதியுபகாரமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அரசியல் அநாதையாக மாற்றியுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒரு கட்சி இல்லை. இன்று அவரை அரசியல் ரீதியாக மகிந்த ராஜபக்ஷ கொலை செய்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தனக்கென கூறிக்கொள்ள கட்சி ஆதரவாளர்கள் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன கடந்த அரசாங்கத்தின் ஜனநாயக நீரோட்டத்தில் நிலைத்து நின்றிருந்தால், 2020 வரையில் அவருக்கு ஜனாதிபதியாக இருந்திருக்க முடிந்திருக்கும். மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொண்டதனால், ஜனாதிபதியின் அந்த ஆட்சிக் காலம் முடியும் வரையில் இருப்பதற்கு மகிந்த இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறு இடமளித்தால் அவர்கள் ராஜபக்ஷாக்களே இல்லையெனவும் முன்னாள் அமைச்சர் சம்பிக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மகாவலி திட்ட நீர் நிரப்பும் பணிகள் இறுதிக்கட்டத்தில்



(கொழும்பு)

துரித மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நாட்டில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இறுதி மகாவலி திட்டமான மொரகஹகந்த களுகங்கை நீர்ப்பாசனத் திட்டத்தின் களுகங்கை நீர்த்தேக்கத்தில் நீர் நிரப்பும் பணிகள் தற்போது குறிப்பிடத்தக்க மட்டத்தை அடைந்துள்ளதாக மகாவலி அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீர்த்தேக்கத்தில் நீர் நிரப்பும் பணிகள் ஜனாதிபதி தலைமையில் கடந்த ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போதைய மழை காலநிலையுடன் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் நீர்த்தேக்கத்தில் முழுமையாக நீர் நிறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், இத்திட்டம் நிறைவடைந்ததன் பின்னர் வரட்சி காலநிலையிலும் எவ்வித தடையுமின்றி சிறுபோகம் மற்றும் பெரும் போகங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு ரஜரட்ட விவசாய சமூகங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் முற்பகல் மகாவலி அதிகார சபைக்கு திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி, அங்குள்ள கேட்போர் கூடத்தில் சிரேஷ்ட அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடிய போதே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.



நன்னீர் மீன் வளர்ப்பு, நீர் மின்சாரம் , சுற்றுலா கைத்தொழில் போன்ற கைத்தொழில் நடவடிக்கைகளும் மொரகஹகந்த நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. லக்கல புதிய நகர அபிவிருத்தி நடவடிக்கைகள், இலங்கையின் முதலாவது சுற்றாடல் கைத்தொழிற் பூங்கா, விசேட சுற்றாடல் வலய திட்டம் மற்றும் விவசாய திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

மகாவலி வலயங்களில் காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தியதுடன், விரைவாக அந்த நடவடிக்கைகளை நிறைவுசெய்ய வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக் காட்டினார்.

மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க, மகாவலி அதிகார சபையின் புதிய பணிப்பாளர் நாயகம் கலாநிதி டி.எம். எஸ்.திஸாநாயக்க உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

அதனைத் தொடர்ந்து கொழும்பு காலி வீதியிலுள்ள தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபைக்கு சென்ற ஜனாதிபதி, அதன் நடவடிக்கைகளை கண்காணித்ததுடன், பணிக்குழாமினருடன் சுமுகமாக கலந்துரையாடினார்.

சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக வருகை தந்துள்ள மக்களின் தேவைகளை உடனடியாக நிறைவேற்றி சிறந்த மக்கள் சேவையை வழங்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி அதிகாரிகளுக்கு சுட்டிக் காட்டினார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# செயற்கை இதயம்

''ஐயா இருக்கிறாரே! அவருக்கு மிகவும் அன்பான இதயம்!'' அப்படி என்று யாராவது சொன்னா அதை இனி மேல் நம்பாதீர்கள்! "உன் கண்ணிலே தண்ணி வந்தா என் நெஞ்சிலே இரத்தம் வரும்" என்றார். சொல்லுவது உண்டு.

அன்பை தெரிவிப்பதற்காக அப்படியெல்லாம் சொல்லலாம். அதில் ஒன்றும் பிழை இல்லை! ஆனால்...

''அன்பான இதயம்'' என்று சொல்லுவாங்களே... அன்புக்கும் இதயத்துக்கும் சம்பந்தம் உண்டு என்று நினைக்கிறீர்களா? "ஆமாம்" என்று நினைக்கும் நம் மனது! "அப்படி இல்லை" என்று நிரூபிக்கும் விஞ்ஞானம்! எப்படித் தெரியுமா?

டொக்டர் பார்ன் கிளார்க் என்று ஒருத்தர் உலகத்திலேயே முதல் தடைவையாகச் செயற்கை இதயம் செய்து இவருக்குப் பொருத்தினார்கள்.! நான் சொல்வது மாற்று இதயம் இல்லை! செயற்கை இதயம். மாற்று இதயம் இன்னொரு உடம்பில் இருக்கிற இதயத்தை எடுத்து பொருத்துவது. செயற்கை இதயம் நாங்கள் தயார் செய்வது. இப்படி செயற்கை இதயம் ஒன்றைத் தயார் செய்து டொக்டர் பார்ன் கிளாரிற்குக்குப் பொருத்தினார்கள். அதற்குப் பிறகு கொஞ்ச நாள் அவர் உயிருடன் இருந்தார்.

செயற்கை இதயத்துடன் அவர் இருக்கும் போது அவர் மனைவிக்கு ஒரு சந்தேகம்!''இப்ப அவருக்கு இருப்பதோ செயற்கை இருதயம்! அதனால் அவர் தன்னிடம் காட்டும் அன்பும் செயற்கையாக இருக்குமோ?'' என்று அந்த அம்மாவுக்குச் சந்தேகம்!

இயற்கையான இதயத்தோடு அந்த டொக்டர் இருக்கும்போது... இதயத்தில் உன்னை வைத்திருக்கிறேன். அப்படி... இப்படி... என்று சொல்லி இருப்பார் தானே...!

அந்த இதயத்தைத் தூக்கி எறிந்துவிட்டு செயற்கை இதயம் வைத்து விட்டார்களே... இப்போது நமது கதி என்ன? இப்படி எல்லாம் அந்த அம்மா நினைத்ததில் தவறில்லை. இந்தச் சந்தேகத்தை நேரடியாகவே அவரிடம் கேட்டார்! அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா?

அவர் புன்முறுவலோடு பதில் சொன்னாராம்! இந்தச் செயற்கை இதயத்தால் தன்னுடைய அன்பில் எந்த விதமான மாற்றமும் இல்லை. அப்படி என்று சொன்னாராம்!

ஆக, அன்பு என்பது இதயத்துக்கும் அப்பாற்பட்ட விடயம் என்பது தெரிகிறது! இப்போது... இதயத்தில் ஒருத்தருக்கு ஒரு வால்வு சரியாக வேலை செய்யவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள்! அதற்காக அவன் காட்டும் அன்பிலும் கொஞ்சம் குறைந்து விடுமா? அது சரி... இந்தச் செயற்கை இதயம் எந்த ஊரில் பொருத்தினார்கள் தெரியுமா? அமெரிக்காவில் ''சார்ட் லேக் சிட்டி'' வைத்தியசாலையில் இந்த சத்திரசிகிச்சை நடந்தது!

பொலித்தீன்– அலுமினியம் இது மாதிரி பொருட்களைக் கொண்டு செயற்கை இதயத்தை தயார் செய்திருக்கிறார்கள்! அப்படி அதைத் தயார் செய்தவர் பெயர் டொக்டர் கே. எஸ். ஜார்விக். அவர் பெயரையே அந்த செயற்கை இதயத்துக்கும் வைத்திருக்கிறார்கள்!

இந்த செயற்கை இதயம் எல்லோருக்கும் பயன்பட இன்னும் கொஞ்சம் நாள் ஆகும். இதில் சில குறைபாடுகள் இருப்பதாக பல டொக்டர்கள் குறை சொல்லி இருக்கிறார்கள்! இதை எல்லாம் நிவர்த்தி செய்து எல்லோருக்கும் பயன்படும் போல் செய்ய வேண்டும்! அது இருக்கட்டும். அன்பு என்பது இதயத்தில் இல்லை என்று தெரிந்தும் போய்விட்டது. அப்போ அது எங்க தான் இருக்குமோ? மூளையில் இருக்குமோ? மூளையையும் செற்கையாகத் தயார் செய்ய முடிந்தால் அதையும் கண்டுபிடித்துவிடலாம்!

செயற்கை இதயம் அலுமினியத்தில் தயார் செய்திருக்கிறார்கள்... சரி! செயற்கை மூளை எதிலிருந்து தயார் செய்வார்கள்? அதற்கு இனிமேல் தான் ஒரு மூலப் பொருளைக் கண்டு பிடிக்கவேண்டும்! ஆனால் அதைக் கண்டுபிடிப்பதற்கும் கொஞ்சம் மூளை வேண்டும்! அதற்கு எங்கே போவது?

# நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராக மனு ரட்ணஜீவன் ஹூல் மீது நாமல் பாய்ச்சல்



(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்டமைக்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலும் மனுத்தாக்கல் செய்துள்ள நிலையில், அதற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் பல சந்தர்ப்பங்களில் தேர்தல் பிற்போடப்பட்டது. அப்போதெல்லாம் அவர் ஏன் உயர்நீதிமன்றத்திற்குச் செல்லவில்லையென நாமல் கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்தோடு, நாட்டில் தேர்தல் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் கடமை என்றும், தேர்தல் நடைபெறுவதை தடுப்பது அதன் கடமையல்ல என்றும் நாமல் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஆட்சியமைக்கப்பட்டு நான்கரை வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் நாடாளுமன்றை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லையென்று தெரிவித்தே உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொலைச் சதிக்குப் பயந்து பாராளுமன்றை கலைத்த முதல் ஜனாதிபதி மைத்திரி

## ரஞ்சன் ராமநாயக்க சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நிரூபிக்கப்படாத கொலைச் சதி தொடர்பான தொலைபேசி உரையாடலை வைத்துக் கொண்டு நாட்டின் மீயுயர் அதிகாரம் கொண்ட பாராளுமன்றத்தை கலைத்து, அரசியல் நெருக்கடியினை மேலும் வலுப்படுத்திய உலகின் முதல் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன இடம்பிடித்துள்ளார் என தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, ஜனாதிபதியின் இவ்வாறான செயற்பாடுகள் முற்றுமுழுதாக அரசியலமைப்பிற்கு அப்பாற்பட்டது எனவும், அவரது செயற்பாடுகளுக்கு வெகுவிரைவில் பதிலடி கிடைக்கப் பெறும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதி கொலைச்சதி தொடர்பில் தொலைபேசி உரையாடலை பகிரங்கப்படுத்திய நாமல் குமார இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதலில் கொலைச் சதி என்பது ஒரு பொய்யான குற்றச்சாட்டு என்றே குறிப்பிட வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியினர் கொலைச் சதி தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுக்கவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றஞ்சாட்டினார். அதற்காகவே அரசாங்கத்தினை நெருக்கடிக்குள்ளாக்கினார்.

ஆனால் தற்போது குற்றத்துடன் தொடர்புபட்ட நாமல் குமாரவை தனக்கு நெருங்கிய கட்சியில் போட்டியிட ஜனாதிபதி எவ்வாறு அனுமதிப்பார். கொலைச்சதியுடன் தொடர்புபட்டதாக குறிப்பிடப்படும் நாலக சில்வா எவ்வாறு குற்றவாளியோ அதே போன்றே நாமல் குமாரவும் ஒரு சந்தேகத்திற்கிடமான குற்றவாளி எனவும் தெரிவித்தார். (இ-7)

# சட்டத்திற்கமைய இலங்கையின் ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்படும் ஜப்பான் நம்பிக்கை



(கொழும்பு)

சட்டத்திற்கு இணங்க இலங்கை நாட்டின் ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்படும் என்பதில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளதாக ஜப்பான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜப்பான் வெளியுறவுத் துறை அமைச்சு இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளதாக, அமைச்சின் ஊடகச் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "இலங்கையின் நீண்ட கால நண்பன் என்ற அடிப்படையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை உள்ளிட்ட அண்மைய நடவடிக்கைகள் தொடர்பாக ஜப்பான் கவனம் செலுத்தி வருகிறது.

அதற்கமைய சட்டத்திற்கு இணங்க இலங்கை நாட்டின் ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்படும் என்பதில் ஜப்பான் நம்பிக்கை கொண்டுள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்கவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஒக்டோபர்மாதம் 26ஆம்திகதி அப்பதவியிலிருந்து நீக்கி, புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை நியமித்தார்.

அதனைத் தொடர்ந்து கடந்த 9ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு, எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படுவதாகவும் ஜனாதிபதி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சட்டமா அதிபரின் கூற்றை ஏற்கமுடியாது - ஹக்கீம்



(கொழும்பு)

நாடாளுமன்றை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என தெரிவித்துள்ள சட்டமா அதிபரின் கூற்றை ஏற்க முடியாதென முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி நாடாளுமன்றை கலைக்கலாமென உயர்நீதிமன்றில் சட்டமா அதிபர் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, நீதிமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டமா அதிபரின் வாதத்தை ஏற்க முடியாதென குறிப்பிட்ட ஹக்கீம், நாடாளுமன்றை கலைத்த ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு இடைக்கால தடை விதிக்கப்படலாமென நம்பிக்கை வெளியிட்டார். அவ்வாறு அறிவிக்கப்பட்டால், நாடாளுமன்றம் கூடுமென்றும் தெரிவித்தார். (இ-7)



**இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டுநிறைவு விழாவும் வாலிபத்தீபாவளி கொண்டாட்டமும் கடந்த 11 ஆம் திகதி மாலை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி. சத்தியமூர்த்தி கலந்து கொண்டார், ஏராளமான பார்வையாளர்கள் வருகை தந்தனர். கலை,கலாசார ,நடன நிகழ்வுகள், வாணவேடிக்கைகள், மாயாஜால வித்தைகள், இசைக்கச்சேரிகள் என்பன இடம்பெற்றன.**

# ஏழு பேரை தெரியாதளவுக்கு நான் முட்டாள் இல்லை

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் ஏழு பேர் குறித்து தெரியாதளவுக்கு நானொன்றும் முட்டாள் இல்லையென நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேர் தொடர்பாக தனக்கு ஏதும் தெரியாதென புதியதொரு மாயையை உருவாக்கி வருகின்றனர்.

மேலும் என்னை பொறுத்தவரை எந்தவொரு விடயமும் தெரியுமென்றால் தெரியுமென கூறுவேன் தெரியாதென்றால் தெரியாதென்றே கூறுவேன். இதற்காக வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை.



அந்தவகையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் ஏழு பேர் தொடர்பில் கூறுங்களென ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தால் தெரிவித்திருப்பேன். ஆனால் திடீரென ஏழு பேர் என்றால் எந்த ஏழு பேரென கேள்வி எழுப்புவது இயல்பாகும்.

இதனை ஒருசிலர் உணராமல் விமர்சித்து வருகின்றனர். குறித்த ஏழு பேர் தொடர்பில் தெரியாதளவுக்கு நான் முட்டாள் இல்லை.

மேலும் அவர்கள் பிணையில் விடுதலையாகி வெளியில் வந்தபோது, 10 நிமிடங்களுக்கு மேல் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்தி ஆறுதல் கூறினேன்" எனவும் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார். (இ-7)



அம்பன் அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் அதிபர் வீ.பரமேஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா மங்கள விளக்கு ஏற்றுவதையும் பாடசாலை அதிபர் தலைமை உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி பா.அரவிந்தன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மகாலிங்கம்)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 9 விதி எண் 9

முழுமையான செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கம்பீரமான தோற்றமும் பார்ப்பவர்களைக் கவரும் காந்த சக்தியும் சுறுசுறுப்பும் மிக்கவர்கள். தனது மனதின் கருத்துக்களைத் தெளிவாக வெளியிடுவார்கள். பிறருடைய உயர்வுக்குத் துணையாக இருப்பார்கள். இவர்களைச் சுற்றி எப்போதும் நண்பர்கள் கூட்டம் இருந்து கொண்டேயிருக்கும். கண்ணியமான வாழ்க்கை வாழ்வார்கள். தன்னைச் சார்ந்தவர்களை உயர்த்த ஓடோடி உழைப்பார்கள். சிறந்த விளையாட்டு வீரர்கள் ஆவார்கள். கலை நுணுக்கமும் ஆராய்ச்சி அறிவும் உடையவர்கள். ஏதாவது புது முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பார்கள். திடமான மன நிலையும் தெளிவான சிந்தனையும் இருக்கும். இவர்கள் தனக்கு வரும் இடர்பாடுகளை நிதானமாகத் தகர்த்தெறிந்து வெற்றி பெறுவார்கள்.

புதிய தொழில்கள் செய்வதால் புதிய நண்பர்களைப் பெறுவார்கள். தனது மனதின் கருத்துக்களை ஒளிவுமறைவின்றி வெளியிடுவார்கள். ஆட்சிப்பீடத்தில் தலைவராக இருப்பார்கள். உயர்ந்த இலட்சியமும் சிறந்த நிர்வாகத் திறமையும் இருக்கும். மின்னல் வேகத்தில் செயற்படுவார்கள். சென்ற இடத்தில் எல்லாம் புதுப்புது நண்பர்களை உருவாக்குவார்கள். கலைகள் மீது ஆர்வம் இருக்கும். எதையும் நன்கு ஆய்வுகள் செய்வார்கள். பொதுசன காரியங்களை மனமுவந்து செய்வார்கள். இறைபக்தியும் குருபக்தியும் உடையவர்கள். கம்பீரமான தோற்றம் உடையவர்கள். கவர்ச்சிக்குப் பெயர் போனவர்கள். கதை, இலக்கியம், சினிமா, பத்திரிகை போன்ற துறைகளில் சிறப்பாக பணியாற்றுவார்கள். நுட்பமான அறிவுடையவர்கள். தொழில் செய்து பெரும் பணம் ஈட்டுவார்கள். அமைதியாக, சந்தோசமாக வாழ ஆசைப்படுவார்கள். இவர்கள் முதுமையில் தெய்வீக மார்க்கத்திற்கு செல்வார்கள். தெய்வீகத்தை அன்பு கலந்த வழியில் பரப்புவார்கள். அனைவரின் அன்புக்கும் பாத்திரமாவார்கள்.

உள்ளத்தில் அன்பின் சக்தி ஊற்றெடுக்கும். சினம் வரும்போது கடுமையாக சீறுவார்கள். பலருடைய பணம் இவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும். மனம் சந்தோசமாக இருக்கும் போது மிகவும் அமைதியாகி விடுவார்கள். உள்ளத்தில் உள்ளதை வெளியிடாமல் இருக்கும் தனித்தன்மை இருக்கும். ஆடம்பரப் பொருட்களுக்காக அதிகம் செலவு செய்வார்கள். எக்காரணம் கொண்டும் பிறருக்கு தீங்கு செய்ய மாட்டார்கள். தன்னால் முடிந்த வரை பிறருக்கு உதவுவார்கள். இயற்கைக் காட்சிகள், ஆடம்பரக் கருவிகள், எலக்டோனிக் பொருட்கள் போன்றவற்றை கண்டு மனம் லயித்துப் போவார்கள். எழுத்தாலும் கலையாலும் பெரும் பணம் சம்பாதிக்கும் யோகம் உடையவர்கள். பல்வேறு தொழில் செய்யும் மனிதர்களின் தொடர்பால் தன்னுடைய தகுதியை உயர்த்திக் கொள்வார்கள்.

தனது முன்னேற்றப் பாதையில் கவனமாக இருந்து விரைவாக முன்னேறக் கூடியவர்கள். ஒரே குறிக்கோளோடு பயணம் செய்வார்கள். தனது கடந்த




வாழ்க்கையில் நடந்த நல்லது, கெட்டது பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். பலரை உயர்த்த காரணமான இவர்களும் படிப்படியாக உயர்ந்து விடுவார்கள். அரசாட்சி செய்பவர்களின் ஆதரவுகள் இருக்கும். சிறந்த விஞ்ஞானி என்ற பெயர் எடுப்பார்கள். மந்திரம், தியானம், மனோவசியம் சம்பந்தப்பட்ட கலைகளைக் கற்றுத் தேர்ந்தவர்கள். ஆன்மீகம் என்றும் துணை நிற்கும். தான தருமம் செய்வார்கள். தேசநலனில் அக்கறை கொண்டவர்கள். அதற்காக நாட்டு நலப்பணிகளுக்கு நன்கொடை வழங்குவார்கள். பிற்கால வாழ்க்கையில் சுகமாக வாழ்வார்கள். இவர்கள் எதிலும் முன்னெச்சரிக்கை உடையவர்கள். அயராத உழைப்பின் மூலம் உயர்வடையக் கூடியவர்கள். தேகபலம் இருக்கும். அமைதியாக இருக்கும் இவர்கள் பல தகுதிகளை பெற்றிருப்பார்கள். மனதில் புதுப்புது கருத்துக்கள் உதித்த வண்ணமிருக்கும். சில நேரம் குறுக்கு வழியில் சென்று துன்பமடைவார்கள். இணை பிரியாத நட்பு இருக்கும்.

தொழில் வளர்ச்சிக்கு உண்டான புதுபுதுத் திட்டங்களை போட்ட வண்ணமிருப்பார்கள். எழுத்தாலும் பேச்சாலும் பெரும் பணம் சம்பாதிப்பார்கள். இவர்கள் பூமிவகைத் தொழில்கள், நவரத்தின வியாபாரங்கள், ஆபரணங்கள், விற்பனை போன்ற தொழில்கள் மூலம் பெரும் பணம் சம்பாதிப்பார்கள். புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டவர்கள். உணவு விடயத்தில் அதிக அக்கறை கொண்டவர்கள். வாசனைத் திரவியங்கள், மலர்கள் மீது அதிக விருப்பமுடையவர்கள். அழகின் மீது மனதை பறிகொடுப்பார்கள்.

தன் இனம் காக்க அயராது பாடுபடுவார்கள். நல்லோர் தொடர்பை விரும்பக் கூடியவர்கள். நல்ல வாழ்க்கைத்துணை அமையும். மனோபலம் மிகுந்தவர்கள் சிலர் உலகப் பணக்காரர்கள் வரிசையில் இடம்பிடிப்பார்கள். உலக அளவில் தன்னுடைய இயக்கத்தை பரப்பி வெற்றிகரமாக நடத்துவார்கள். உயரிய விருதுகளையும் பெறுவார்கள். எளியவர்களுக்கும் துன்பப்படுபவர்களுக்கும் உதவுவார்கள். சிறந்த மனிதர்கள். சூடான திரேகம் உடையவர்கள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
6,15,24,5,14,23,9,18,27.

**துரதிர்ஷ்ட திகதிகள்**
8,17,26,2,11,20,29.

**அதிர்ஷ்ட நிறங்கள்**
வெளிர்நிலம், மஞ்சள், பொன்னிறம், சிவப்பு.

**துரதிர்ஷ்ட நிறங்கள்.**
கறுப்பு, பச்சை, இருண்ட நிறங்கள்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**
பவளம், பிளட்ஸ்டோன், கார்னட், நவரத்தினங்கள்.


(முற்றும்)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

95



## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

இவ்வாறாக 1670களில் உள்நாட்டு அரசியல் நிலைமைகளினால் பாரிய பின்னடைவுகளை டச்சுக்காரர் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. இராசசிங்கனுக்கும் அவனது சகாக்களாலும் உள்ளூர் அதிகாரிகளாலும் பல எதிர்ப்புக்களும் இடையூறுகளும் ஏற்பட்டன.

இவ்வேளையில் வான்கோன்ஸ் இராசசிங்கனுடன் தொடர்புகளை ஏற்படுத்த முனைந்தபோதும் அது பலனளிக்கவில்லை.

இக்காலகட்டத்தில் நாடு ஒரு மந்தமான, அரசியல் ஸ்திரமற்ற நிலையில் காணப்பட்டது. இவ்வேளையில் 1671 இல் டச்சுக்காரர்களுக்கு மேலும் பாரிய இடி ஒன்று காத்திருந்தது.

டச்சுக்காரர் 1658 இல் போர்த்துக்கீசரை முற்றாக இலங்கையிலிருந்து வெளியேற்றியதன் பின் அவர்களது போர் நடவடிக்கை கண்டி மன்னனூடான உள்ளூர்ப் போர்களாகவே காணப்பட்டன.

ஆனால் 1672களில் டச்சுக்காரருக்கு இன்னொரு வெளிநாட்டு ஆதிக்ககாரர்களுடன் மோத வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேற்படி காலகட்டத்தில் ஐரோப்பாவில் எழுச்சிபெற்ற நாடாகிய பிரான்ஸ் தேசம், கீழைத்தேச வர்த்தக நடவடிக்கைகளில் இறங்கியது.

இலங்கையின் கேந்திர மையமும் கொட்டியாரக் குடாவில் உள்ள இயற்கைத் துறைமுகமும் அவர்களது கவனத்தை ஈர்த்தன. அதனால் அவர்கள் இராசசிங்கனுடன் தொடர்புகளை ஏற்படுத்தினர்.

21 பங்குனி 1672 இல் கடல் தளபதி டேகா ஹேக் (Deha Hage) தலைமையில் பிரெஞ்சுக் கப்பல் ஒன்று கொட்டியாரக் குடா, இரு வாயில் முனைகளைக் கொண்ட இயற்கைத் துறைமுகமாகும்.

அதிலுள்ள பிரதான வாயிலான திருக்கோணேஸ்வரர் கோயிலை அண்டிய பகுதியில் தான் போர்த்துக்கீசரும் அவர்களைத் தொடர்ந்து டச்சுக்காரரும் கோட்டை கட்டி நிலைகொண்டனர்.

மறுவயிலான ஒஸ்ரன் பேர்க் (Osten burg) என்னும் பகுதியிலேயே பிரெஞ்சுக்காரர் தமது இராணுவப் பாதுகாப்பு நிலையைக் கட்ட முயன்றனர். டச்சுக்காரர் கொட்டியாரக் குடாவிற்கு Dwers in de Weg என்று சூட்டிய பெயருக்குப் பதிலாக பிரான்சுக்காரர் Isle of the Sun எனப் பெயரிட்டு தமது பாதுகாப்பு அரணை அங்கு அமைக்கத் திட்டமிட்டனர்.

இந்நிகழ்வு டச்சுக்காரருக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். இராசசிங்கன் மீது ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கும். எப்படியாவது பிரெஞ்சுக்காரரை வெளியேற்றி விட வேண்டும் என்பதற்காக டச்சுக்காரர் இராசசிங்கனுடன் தொடர்புகளை ஏற்படுத்தினர்.

பிரெஞ்சுக்காரரைப் பயன்படுத்தி டச்சுக்காரரை வெளியேற்றும் திட்டத்தில் இருந்த இராசசிங்கன் டச்சுக்காரரின் வேண்டுகோளை ஏற்காததுடன் பிரெஞ்சுக்காரருக்கு கொட்டியாரக் குடாவில் தங்கியிருந்து வியாபாரம் செய்யவும் அனுமதியும் வழங்கியிருந்தான்.

வேறு வழியின்றிப் பிரெஞ்சுக்காரருடன் தொடர்பு கொண்ட டச்சுக்காரர் தாம் போர்த்துக்கீசரிடமிருந்து பெற்ற திருகோணமலையை விட்டு நீங்குமாறு பணிவுடன் வேண்டினர்.

ஆனால் பிரெஞ்சுக்காரர் அதனை ஏற்காது கொட்டியாரக்குடாவில் தமது பாதுகாப்பு அரண்களை அமைக்கத் தயாராகினர்.

இதனால் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் எதுவித ஆயுத, மருத்துவ உணவு வகைகளும் பிரெஞ்சுக்காரருக்கு கிடைக்காதவண்ணம் டச்சுக்காரர் பொருளாதாரத் தடையை விதித்தனர். பிரெஞ்சுக்காரருக்கு இராசசிங்கனால் கூட உதவி வழங்க முடியாமற் போய் விட்டது.

மேலும் தென்னிந்தியக் கரையிலிருந்து வந்த பிரெஞ்சுக்காரரின் மூன்று கப்பல்களையும் டச்சுக்காரர் பறிமுதல் செய்தனர். அத்தோடு சிறியளவில் சில பிரெஞ்சுப் படைகளைத் தாக்கியதுடன் பிரெஞ்சுப் போர் வீரர் சிலரையும் கைது செய்தனர்.

எனினும் பிரெஞ்சுக்காரர் டச்சுக்காரருக்கு எதிராகப் போர் தொடுக்க முற்படவில்லை. பிரெஞ்சுக்காரரின் கப்பல்கள் பறிமுதல் செய்யப்பட்டதும் அவர்களின் போர் வீரர் சிலர் கைது செய்யப்பட்டதும் எதுவித உணவு, மருந்து விநியோகம் கிடைக்கப்பெறாத நிலையில் பல போர் வீரர் வருத்தத்தையும் மரணத்தையும் சந்தித்தமையும் அவர்களை இலங்கையை விட்டு 1674 இல் வெளியேற்ற வைத்தன.

டச்சுக்காரர் மீண்டும் 1674 இல் இலங்கையின் சகல கரையோரத் துறைமுகங்களையும் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அத்தோடு சகல கரையோரத் துறைமுகங்களையும் மேலும் பலப்படுத்தி விரிவுபடுத்தினர்.

1671 இல் வான்கோன்ஸ் இலங்கையிலிருந்து பற்றேவியா அரசின் தேசாதிபதியாகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றபோது வான் கோன்ஸ் என்ற பெயரையே தாங்கிய தன் மகனை இலங்கையின் தேசாதிபதி ஆக்கிவிட்டுச் சென்றான்.

தந்தையும் மகனும் சேர்ந்து தமது கொள்கைகளை மேலும் விரிவுபடுத்துவதில் தீவிரமாக இயங்கினர். இராசசிங்கன் தொடர்ந்தும் டச்சுக்காரருக்கு எதிர்ப்புக்காட்டிய வண்ணமே இருந்தான்.

புதிய தேசாதிபதி வான் கோன்ஸ் இராசசிங்கனுடன் சமாதானம் செய்ய முற்பட்டபோதும் அது பயனளிக்கவில்லை.

1679 இல் வான் கோன்ஸ் இலங்கையிலிருந்து திருப்பி அழைக்கப்பட்டு யாழ்ப்பாணத் தளபதியாக இருந்த லோறன்ஸ் பில் (Laurence Pyl) இலங்கைத் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான்.

இதற்கு முன்பே 1677 இல் பற்றேவியா கவுன்சில் இராசசிங்கனின் கண்டிப் பிரதேசத்தில் டச்சுக்காரரினால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களைத் திரும்பவும் அவனிடம் கொடுப்பது என்றும் அவனுடன் சமாதான உடன்படிக்கை செய்வதென்றும் முடிவு செய்திருந்தது.

(தொடரும்)

> “இராசசிங்கனுக்கும் அவனது சகாக்களாலும் உள்ளூர் அதிகாரிகளாலும் பல எதிர்ப்புக்களும் இடையூறுகளும் ஏற்பட்டன. இவ்வேளையில் வான்கோன்ஸ் இராசசிங்கனுடன் தொடர்புகளை ஏற்படுத்த முனைந்தபோதும் அது பலனளிக்கவில்லை. இக்காலகட்டத்தில் நாடு ஒரு மந்தமான, அரசியல் ஸ்திரமற்ற நிலையில் காணப்பட்டது”

# தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு
# யாழ்.பல்கலை சமூகம் கவனயீர்ப்புப் போராட்டம்






(யாழ்ப்பாணம்)

மலையக தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வினை வலியுறுத்தி பல்கலை சமூகத்தினர் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று யாழ்.பல்கலை முன்றலில் முன்னெடுத்தனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தில், கலந்து கொண்ட மாணவர்கள் வெளியிட்ட அறிக்கையில்,

மலையக மக்கள் தங்கள் உழைப்பினை இந்த மண்ணுக்கு எவ்விதமான நியாயமான தொழிலாளர் சலுகையும் இன்றி சமர்ப்பித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரத்திற்கு பெருந்தோட்டத்துறை ஊடாக கடந்த 200 வருடகாலமாக முக்கியமான பங்களிப்பினை வழங்கி வருகின்றனர்.

இவர்கள் உழைப்புக்கேற்ற ஊதியம்,உட்கட்டமைப்பு வசதிகள்,நிலத்துக்கான உரிமை என்பன அற்றவர்களாக தோட்டக் குடியிருப்பில் (லயன்) அதிகமான மக்கள் வாழ்கின்றனர்.

இந்த நிலையில் ஒட்டுமொத்த மலையக மக்களின் குரலும் அடிப்படைச் சம்பளம் 1000 ரூபாவாக உயர வேண்டும் என்பதாக காணப்படுகின்றது.

அந்தவகையில் சமூக நீதிக்காக குரல்கொடுக்கும் சமூகப் பொறுப்புள்ள மாணவர்கள் என்ற ரீதியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களான நாம் மலையக மக்களுக்கு அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியமாக நாளொன்றிற்கு ரூபா 1000 அடிப்படைச் சம்பளம், மாதத்தில் 25 நாட்கள் வேலை மற்றும் ஏனைய தொழிலாளர் நலன்சார் உரிமைகளையும் உரியவகையில் உள்வாங்கும் வகையில் புதிய கூட்டு ஒப்பந்தம் அமைய வேண்டும் என்பதை உரியவர்களுக்கு வலியுறுத்துவதுடன் இவ்விடயம் தொடர்பாகப் பொறுப்புக் கூறவேண்டிய அரசியற்தலைமைகள், தொழிற் சங்கங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் இதனை அவசர மற்றும் அவசிய கோரிக்கையாக ஏற்று உடனடித் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் அதிகரிக்கப்படும்
### அமைச்சர் சந்திரசேன தெரிவிப்பு



(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களது வேதனம் அதிகரிக்கப்படும் என்று புதிதாக பதவியேற்றுள்ள பெருந்தோட்டத்துறை அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் வைத்து அவர் தமது கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர், இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு தமக்கு அறிவுறுத்தி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் பொருளாதாரத்துக்காக பெரிதும் பாடுபடுகின்றனர். அவர்களுக்கான வசதிகளை பெற்றுக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1557

### சிதம்பரம்

அப்பாவின் சொத்தும் மாமனாரின் வரதட்சணையும் இல்லாமல்



ஒரு ஆண் தன் மனைவியை காப்பாற்றுவான் எனில் அவனே உண்மையான ஆண் மகன்

### வெங்கட்

உலகத்தை ஆழமாக நேசி ஆனால் ஒருவரையும் நம்பாதே



ஆழமாக உறங்கும் போதும் ஒரு கண்ணை மூடாதே

### மாணிக்கம்

பழகும் விதத்தில் பழகிப் பார்த்தால் பகைவன்கூட நண்பனே



பாசம் காட்டி ஆசை வைத்தால் மிருகம்கூடத் தெய்வமே

### ரவி

நிறைவான வாழ்விற்கு ஆசைப்பட்டு நிம்மதியை இழந்து தவிப்பதை விட



நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்துவிட்டு வாழ்வை நிறைவு செய்யலாம்

### கோபி

பணம் முக்கியம் அதை விட முக்கியம் அது வரும் வழி



அது வரும் வழியை வைத்துத்தான் அது செல்லும் வழி தீர்மானிக்கப்படும்

### இளங்கோ

கொஞ்சமாக உழைத்தாலும் தாய் தந்தையுடன் இருப்பதே பாக்கியம்



வாழும் போதே நன்மை செய்ய விரும்பினால் அவர்களை நன்றாகக் கவனித்துக்கொள்!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஞானசாரரை விடுதலை செய்யாவிட்டால் மாற்றுவழிகளை கையாள்வோம்

## சிங்கள ராவய எச்சரிக்கை



(கொழும்பு)

ஞானசார தேரரை விடுதலை செய்யாவிட்டால் மாற்று வழிகளை ங்கையாள்வோம் என சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல் கந்த சுதத்த தேரர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை விடுவிக்குமாறு கோரி நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பிலான வழக்கு ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் குறித்த வழக்கு விசாரணையின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "தற்போது அநீதியான வகையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கலகொட அத்தே ஞானசார தேரரின் வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

எங்களுக்கு தற்போது கிடைத்துள்ள தகவல்களுக்கு அமைய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் சிலருக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிகிறது.

அதேபோன்று, இராணுவத்தினரின் உரிமைகளுக்காக போராடி, அவர்கள் சிறையில் அடைக்கப்படுவதற்கு எதிராக குரல் கொடுத்த கலகொட அத்தே ஞானசார தேரரையும் முடிந்தளவு விரைவாக விடுதலை செய்யுமாறும் ஜனாதிபதியிடம் நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.

அப்படியல்லாவிடின் இரண்டு மாற்று வழிகள் இருக்கின்றன, நாங்கள் சிங்கள பௌத்தர்களுக்கு கூறுவது என்னவென்றால், ஞானசார தேரரை ஜனாதிபதி விடுவிக்காத பட்சத்தில் வாக்குச்சீட்டுகளை செல்லுபடியற்றதாக்குங்கள்.

அதேபோன்று, எதிர்வரும் 17 ஆம் திகதி சில மாவட்டங்களை இலக்காக கொண்டு அந்த இரண்டாவது மாற்று வழியை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று ஜனாதிபதிக்கு நாங்கள் அறிவிக்க விரும்புகின்றோம்.

அந்தவகையில், ஞானசார தேரரையும், இராணுவத்தினர் சிலரையும் துரிதமாக ஜனாதிபதி மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்வார் என்ற நம்பிக்கையுடன்தான் நாங்கள் தற்போது செயற்பட்டு வருகிறோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## தேங்காய் எண்ணெய் போத்தலில் விலையை தெளிவாக குறிப்பிடவும்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் சந்தைக்கு விநியோகிக்கப்படும் அனைத்து தேங்காய் எண்ணெய் வகைகளையும், விற்பனைக்கு ஏற்ற வகையில் சந்தையில் விநியோகிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை, தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, அனைத்து தேங்காய் எண்ணெய் தயாரிப்பாளர்களுக்கும் விடுத்துள்ளது.

விற்பனை செய்யப்படும் தேங்காய் எண்ணெய் போத்தல் மற்றும் ஏனைய பொதிகள், எண்ணெயின் வகை, தயாரிப்பு, காலாவதியாகும் தினம், சில்லறை விலை, எடை, தயாரிப்பாளரின் பெயர், முகவரி உள்ளிட்ட தகவல்களை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைகளைக் கடைப்பிடிக்காத தேங்காய் எண்ணெய் தயாரிப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அதிகார சபை தெரிவித்துள்ளது. (இ-7)

## மத்திய மாகாணத்தில் ஈயினால் பரவும் புதிய நோய்

(கொழும்பு)

மத்திய மாகாணத்தில் சிறிய ஈயினால் பரவிவரும் தோல் நோய் தொடர்பில் அவதானம் செலுத்தமாறு மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் சாந்தி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

லிஸ்மானிய என அழைக்கப்படும் இந்த நோய் சிறிய ஈயினால் பரவுவதுடன், ஈ கடித்த பின்னர் தோல் சிவப்பு நிறம் அடைந்து அரிப்பு ஏற்படும் என வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் வாராந்தம் 6 புதிய எச்.ஐ.வி நோய் தொற்றாளர்கள் பதிவு செய்யப்படுவதாக சுகாதார பணிமனை தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை வரலாற்றில் இதுவரையில் அதிக எண்ணிக்கையான எச்.ஐ.வி. தொற்றாளர் எண்ணிக்கை கடந்த வருடமே பதிவானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கடந்த வருடம் மாத்திரம் 285 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதேநேரம் நாடெங்கிலும் தற்போது 4 ஆயிரத்து 200 பேர் எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

### உயிருக்கு அச்சுறுத்தல்

## இஸ்ரேல் சிறையில் 13 இலங்கையர்கள்

(கொழும்பு)

இலங்கையர்கள் 13 பேர் இஸ்ரேலில் சிறை வைக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வாரங்களாக அவர்களது மனித உரிமைகள் மீறப்பட் டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

கடந்த ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற அரசியல் மாற்றத்தின் பின்னர் இந்த 13 பேருக்கும் மரண அச்சுறுத்தல்கள் இருந்ததாகவும் அதனால் பாதுகாப்பு நோக்கத்திற்காக சுற்றுலா விசாவில் இஸ்ரேலுக்கு வந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர்கள் பென்-குரியன் விமான நிலையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் மொழி பெயர்ப்பாளர் ஒருவர் அவர்களுக்கு இல்லாத காரணத்தினால் அவர்களுக்காக முன்வந்த ஒருவர் உட்பட 11 பேரும் இரு பெண்களும் இஸ்ரேல் தடுப்பு காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 240 | 220 | 240 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 140 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 160 | 110 | 200 |
| தக்காளி | 400 | 180 | 400 | 200 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 180 | 180 | 200 | 170 | 200 |
| கரட் | 200 | 250 | 240 | 140 | 400 |
| பூசணி | 80. | 80 | 60 | 40 | 60 |
| புடோல் | 160 | 140 | 140 | 150 | 160 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 140 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 120 | 130 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 500 | 300 | 400 | 500 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 160 | 160 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 500 | 400 | 480 | 300 | 400 |
| லீக்ஸ் | 200 | 180 | 160 | 110 | 200 |
| பீற்றூட் | 150 | 160 | 160 | 150 | 200 |
| கறிமிளகாய் | 300 | 140 | 240 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300 | 110 | 200 |
| போஞ்சி | 600 | 400 | 240 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 240 | 200 | 240 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 50 | 30 | 60 |
| தேசிக்காய் | 500 | 300 | 450 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 280 | 180 | 200 | — | 240 |
| வெங்காயப்பூ | — | — | — | 120 | — |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 25 |
| ஈரப்பலா | 60 | 100 | 70 | 120 | 160 |

# செய்தித்துளிகள்

## மருத்துவக் கற்கை நெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

தேசியத் தகுதிக்கான நுழைவுத் தேர்வு - 2019 (நீட் பட்டப்படிப்பு) - 2019 இந்தியாவில் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சின் கீழ் மருத்துவ ஆணையம்/ பல் மருத்துவ ஆணையத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மற்றும் பல் மருத்துவ கல்லூரிகளில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் ஆகிய கற்கை நெறிகளுக்காக தேசிய பரீட்சைகள் நிறுவகத்தினால் தேசியத் தகுதிக்கான நுழைவுத் தேர்வு -2019 இற்கான இணைய வழி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்நுழைவுத் தேர்வு தொடர்பான பரீட்சை பாடத் திட்டம், அனுமதிக்கான தகுதி எல்லை, பரீட்சைக் கட்டணம், பரீட்சை நிலையம் போன்ற மேலதிக விபரங்களினை www.ntaneet.nic.in எனும் இணையத்தள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத்திகதியான 30 நவம்பர் 2018இற்கு முன்னதாக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட தகவல்கள் அனைத்தும் சரியானவையா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும். (இ-7)

## சோமவன்சவின் கட்சி மொட்டில் இணைந்தது

(கொழும்பு)

மறைந்த சோமவன்சவினால் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் சேவை கட்சி, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது. அதற்கு அப்பால், கட்சியின் ஸ்தாபகரான மறைந்த சோமவன்ச அமரசிங்கவுக்காக, "சோமவன்ச அமரசிங்க மன்றம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது என, கட்சியின் தலைவர் ஜயந்த விஜேசிங்ஹ தெரிவித்தார்.

"அரசியலுக்கு நுழைகின்ற இளைஞர், யுவதிகளுக்கு இந்த மன்றத்தின் ஊடாக அரசியல் அறிவை பெற்றுக் கொடுத்தல், நலன்புரி சேவைகளை முன்னெடுத்தல் மற்றும் கஷ்டங்களுக்கு மத்தியில் கல்விபயிலும் பிள்ளைகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் உள்ளிட்டவை முன்னெடுக்கப்படும்" எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## கற்கைநெறி பட்டமளிப்பு விழாவும் தமிழ்நிதி விருது வழங்கல் நிகழ்வும்

(கொழும்பு)

கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்தும் 2017 - 2018 இற்கான தமிழ்ப்பட்டயக் கற்கைநெறி பட்டமளிப்பு விழாவும், தமிழ் நிதி விருது வழங்கல் நிகழ்வும் 22.11.2018 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்கப் புலமைக்குழுத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். தமிழ்நிதி விருதினை தமிழர் வாழ்விட வரலாற்று ஆய்வாளர் அருணா செல்லத்துரை பெற்றுக்கொள்வார். (இ-7)

## பல்கலை.மாணவர்கள் பேரணி



(கொழும்பு)

களனி பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை தொடரூந்து நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை மேற்கொண்டனர். நலன்புரி உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (இ-7)


## சு.க.அமைப்பாளர்கள் கூட்டம் இரத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கொழும்பில் நேற்று சந்திக்கவிருந்தார். எனினும், அந்தக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்க விருப்பதனால், அக்கூட்டம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார். (இ-7)

# சிறுவர் அரங்கம்

## நரியும் அதன் நிழலும்



ஒரு நரி அதிகாலை எழுந்து மேற்கு நோக்கி வேட்டைக்குப் புறப்பட்டது. கிழக்கே இருந்து எழுந்த சூரிய ஒளியில் அதன் நிழல் வெகு நீளமாய் பெரியதாகத் தெரிந்தது. நரிக்கு ஏக குஷி. "நான் ரொம்பப் பெரிய ஆளாக்கும். அதுவும் இந்தக் காட்டின் ராஜாவாக உள்ள சிங்கத்தை விடவும் பெரியவனாக நான் உள்ளேன் என நினைத்துக் கொண்டே வேட்டைக்குச் சென்றது.

செல்லும் வழியில் நரி ஒரு சிங்கத்தைக் கண்டது. சிங்கமோ சற்று முன்னர் தான் ஒரு மானை வேட்டையாடி அதை உண்ட களைப்பில் மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தது.

நரியும் தன்னுடைய நிழல் சிங்கத்தைவிடவும் பெரியதாக இருப்பதாக நினைத்துக்கொண்டு சிங்கம் வரும் வழியில் நடந்து சென்றது. சிங்கமும் நரியை ஒன்றும் செய்யாமல் கடந்து சென்றது.

நரிக்கோ ரொம்ப சந்தோசம். நாம் சிங்கத்தை விடவும் பெரியதாக இருப்பதனால் சிங்கம் என்னைக் கண்டு பயந்து சென்றது என நினைத்துக்கொண்டு அன்று மாலை தன்னுடைய வீட்டிற்குச் சென்றது.

மாலை வீட்டிற்குச் சென்றதும் நரி காட்டில் உள்ள மிருகங்களை எல்லாம் அழைத்தது. அனைத்து மிருகங்களும் நரியின் கூட்டத்திற்கு வந்தன. நரி அனைத்து மிருகங்களிடமும் "இனிமேல் இந்த காட்டிற்கு நான் தான் ராஜா" என்றது.

யானையோ, "இதை நாங்கள் ஏற்க முடியாது என்றது. உடனே நரி காலையில் நடந்த சம்பவத்தைக் கூறி சிங்கமே என்னைப் பார்த்துப் பயந்து சென்றது" என்றது. கூட்டத்தில் இருந்த மானோ, "சிங்கத்தை உன் முன் மண்டியிடச் சொல் பிறகு உன்னை இந்தக் காட்டிற்கு ராஜவாக்குகிறோம்" என்றது.

அடுத்த நாள் நரி அந்த சிங்கத்தை தேடிச் சென்றது. செல்லும் வழியில் சிங்கம் தன்னுடைய பாதையை நோக்கி வருவதைக் கண்டு நரி கர்வத்துடன் நின்றது.

சிங்கம் வந்தவுடன் சிங்கத்தைக் பார்த்து, "என் முன்னாள் மண்டியிட்டுச் செல்" என்று நரி கூறியது.

சிங்கமோ மிகவும் கோபம்கொண்டு தரக்குறைவாகப் பேசிய நரியைப் பார்த்து, "உன்னை மன்னித்து விடுகிறேன் உடனே இங்கிருந்து செல்" என்றது.

நரியோ சிங்கம் தன்னைக் கண்டு பயந்து விட்டது என நினைத்து "முடியாது" என்று பதில் கூறிக் கொண்டே தன்னுடைய நிழலைப் பார்த்தது.

அது மதிய நேரம் என்பதால் நிழல் உண்மையான அளவில் இருந்தது. அப்பொழுது தான் நரிக்குப் புரிந்தது சூரிய ஒளியில் தான் தன்னுடைய நிழல் பெரியதாக இருந்தது என்று.

இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிங்கம் நரியை ஒரே அடியில் கொன்றது.

நீதி: முட்டாள்தனமாக பெரிதாக யோசித்தால் அதற்கான இழப்பும் பெரிதாக இருக்கும்.

## பொது அறிவு துணுக்குகள்

- நீரைவிட இரத்தத்துக்கு 6 மடங்கு அடர்த்தி அதிகம்.
- தொலைக்காட்சி நிலையங்கள் அதிகம் உள்ள நாடு, அமெரிக்கா.
- எறும்பின் ஆயுட்காலம், 10 ஆண்டுகள்.
- சைக்கிளைக் கண்டுபிடித்தவர், மாக்மில்லன்.
- உலகின் வெண்தங்கம் - பருத்தி.
- சிங்கப்பூரின் பழைய பெயர், டெமாஸெக்.




பிடி பிடி பந்தைப் பிடி இரண்டு படங்களுக்குமான 6 வித்தியாசங்களைக் கண்டுபிடி



பார் பார் படத்தைப் பார் கேள்விக்குறி இருக்கும் இடத்தில் வரவேண்டிய பொருத்தமானபடம் எது கூறு கூறு?

## வலசை போகும் வண்ணத்துப்பூச்சிகள்!



பறவைகள் வலசை போவதை, மீன்கள் வலசை போவதைப்பற்றி பாடப் புத்தகத்தில் படித்திருக்கிறோம். ஆனால், வண்ணத்துப்பூச்சிகள் வலசை போவதைப்பற்றிப் படித்திருக்கிறோமா? இது என்ன புதுக்கதையா இருக்குதென்று பார்க்கிறீர்களா? உண்மைதான்! அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வாழும் மோனார்க் வண்ணத்துப்பூச்சிகள் வலசை போவதற்கு புகழ்பெற்றவை. அதுவும் எவ்வளவு தூரம் தெரியுமா? சுமாராக 4,828 கிலோ மீற்றர்கள். நினைத்துப்பார்க்கவே ஆச்சரியமா இல்லை!

மோனார்க் வண்ணத்துப்பூச்சியின் வாழ்நாளோ 6-8 வாரங்கள்தான், எடை 0.25-0.75 கிராம்தான். ஒரு கிராம் எடை கூட இல்லை. இந்தப் பூச்சி சுமார் 4,800 கி.மீ. பறந்து பயணிக்கிறது என்றால் வியப்பாக இல்லையா?

முதுகெலும்பில்லாத இந்த வண்ணத்துப்பூச்சிக்கு ஏன் மோனார்க் என்ற பெயர் வந்தது தெரியுமா? வண்ணத்துப்பூச்சிகளில் மிகவும் அழகானது இந்த மோனார்க் வண்ணத்துப்பூச்சி. மேலும் மோனார்க் என்பதற்கு ஆளும் அரசன் என்று பொருள்.

மோனார்க் வண்ணத்துப்பூச்சிகள் வருடந்தோறும், மெக்சிகோ நோக்கி இலையுதிர் காலத்தில், குளிரிலிருந்து தப்பிக்க, அமெரிக்கா மற்றும் கனடாவிலிருந்து தென்மேற்கு மெக்சிகோ நோக்கி வலசை போகின்றன. இது பூச்சி இனங்களில் தனித்துவம் வாய்ந்தது. வேறு எந்தப் பூச்சியும் வலசை போவதில்லை. மேலும் இந்த மெக்சிகோ வலசை மிகவும் அற்புதமானதும் உலகப் புகழ்பெற்றதும் ஆகும்.

இந்த மோனார்க் வண்ணத்துப் பூச்சிகளிடம், இலையுதிர்காலம் இப்ப வரப்போகிறது என்று சொல்லி மெக்சிகோ நாட்டுக்குப் புறப்படுங்கள் என்று சொன்னது யார்? யாரும் இல்லை. ஆனால், ஒவ்வோர் ஆண்டும் ஒக்டோபர் மாதம்தான் புறப்படும் என்றில்லை. சிலசமயம் விரைவாகவும் கூடப் புறப்பட்டுப் போகும்.

(தொடரும்...)

தர்மத்தின் வாழ்வு தன்னை சூதுகௌவும் தர்மம் மறுபடியும் வெல்லும்

~ பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இந்தப் போரில் யாருக்கு வெற்றி

பாரதப் போர் ஆரம்பமாகப் போகிறது. கௌரவர்களும் பாண்டவர்களும் குருசேத்திரப் போருக்கு ஆயத்தமாகின்றனர்.

போரின் துயரம் இருவரைக் கடுமையாக வாட்டுகிறது. அவர்கள் வேறுயாருமல்ல துரியோதனின் தந்தை திருதராட்டிரனும் தாய் காந்தாரி ஆகிய இருவரும் ஆவார்.

முதுமை ஒருபுறம்; கண் தெரியாத வேதனை மறுபுறமாக இருக்க, தன் பிள்ளைகளும் தன் தம்பி பாண்டுவின் பிள்ளைகளும் போர் புரி கின்ற கொடுமை இன்னும் பன்மடங்கு வேதனையை அவர்களுக்குக் கொடுத்தது.

பாண்டவர்கள் வென்றால் தன் பிள்ளைகள் நூற்றொருவரையும் இழக்க வேண்டி வரும்.

மாறாக தன் பிள்ளைகள் வென்றால் தன் தம்பியின் ஐந்து பிள்ளைகளையும் பறி கொடுக்க நேரிடும்.

இவ்வாறு நடந்தால் தன் பிள்ளைகளுக்காக தன் உடன்பிறந்த தம்பியின் பிள்ளைகளைக் கொன்ற திருதராட்டிரன் என்று உலகம் பழிக்கும்.

ஆக, எந்தவகையிலும் மீளமுடியாத துயரம் திருதராட்டிரனைத் தாக்கவே செய்தது. இந் நிலையில், காந்தாரியும் வேதனைப்பட்டவராக இருந்தார்.

இதை நாம் கூறும்போது, பாரதப் போர் நடப்பதில் வீஷ்மர், துரோணர், விதுரன் உள்ளிட்டவர்கள் கவலை கொள்ளவில்லையா என்றால்,

அவர்கள் தர்மம் அறிந்தவர்கள். ஊழ் வினையின் வலிமை வந்து சூழ்ந்து விட்டது என்பதை உணர்ந்தவர்கள்.

தவிர வீஷ்மர், துரோணர் உள்ளிட்டவர்கள் துரியோதனனின் போர்த்தளபதிகள். எனவே அவர்கள் வேதனைப்படுவதென்பது ஏற்புடையதன்று.

நிலைமை இதுவாக இருக்க வேதனையின் வலி தாங்க முடியாத திருதராட்டிரன் வியாச முனிவரைப் பார்த்து முனிபுங்கவரே இந்தப் போரில் வெற்றி யார் பக்கம் என்று கேட்கிறார்.

அதற்கு வியாசர் தர்மம் எங்குள்ளதோ அங்கு வெற்றி உண்டாகும் என்று கூறிவிடுகிறார்.

வியாசர் அளித்த பதிலின் முடிவு சரியாக இருந்தது என்பதை 18ஆம் நாள் போர் முடிவு தந்து நின்றது.

இவை ஒருபுறமிருக்க, இப்போது நாம் கேட்பது இலங்கையில் நடக்கின்ற அதிகாரப் போரில் யாருக்கு வெற்றி கிடைக்கும் என்றால்,

தர்மம் எங்குள்ளதோ அங்கு வெற்றி உண்டாகுமென்று கூறிவிட முடியாது.

ஏனெனில் இருபக்கத்திலும் அதர்மமே மேலோங்கி நிற்கும்போது தர்மம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றாகிவிடுகிறது.

அப்படியானால், யாருக்கு வெற்றி. அட! யாருக்கு வெற்றி என்பதுதான் கேள்வி என்றால் அதற்கு பதில் கிடையாது. வெற்றி இல்லாதவிடத்து வெற்றியை உரிமை கோருவது சாத்தியமில்லையல்லவா.

ஆக, இலங்கையில் நடக்கின்ற அரசியல் அதிகாரப் போட்டியின் முடிவு என்னவாக இருக்கும் என்று கேள்வியை மாற்றிக் கேட்டால்,

அதற்கான பதில், ஊழ்வினை வந்து சூழ்ந்து விட்டது. அழிவுதான் மிச்சம். இதுவே தர்மத்தின் தீர்ப்பாகும்.

## யாழில் நவீன வசதிகளுடன் புகைப்பரிசோதனை நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வாகனப் புகைப்பரிசோதனை நிலையம் ஒன்று கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ் சாலையில் அமைக்கப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிராந்திய பொறியியலாளர் எஸ்.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் திட்டத்தின் கீழ் நாடுமுழுவதும் நவீன வசதிகளுடன் கூடிய வாகன புகைப்பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. அந்த வகையில் யாழ்.மாவட்டத்துக்குரிய நிலையம் கோண்டாவிலில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சகல வசதிகளுடனும் அமைக்கப்படவுள்ள இந்த நிலையத்தின் சேவைகள் மிகவும் பயனுள்ளதாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சுயமரியாதையை காக்க மகிந்த பதவி விலக வேண்டும்

### மங்கள சமரவீர தெரிவிப்பு

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது சுயமரியாதையை காத்துக்கொள்ளும் வகையில் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என மங்கள சமரவீர கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தைகலைக்கும் வகையில் ஜனாதிபதி விடுத்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 7ஆம் திகதி வரை இடைக்காலத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டரில் வெளியிட்டுள்ள கருத்திலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

அதில் மேலும் "பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது சுயமரியாதையை காத்துக்கொளளும் வகையில் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்" என தெரிவித்துள்ளார். (ம)

## விபத்தில் 2 வயது குழந்தை பலி

(கொழும்பு)

சிலாபம், மாதம்பை வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் 2 வயது குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன் விபத்தில் 2 வயது குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஐவர் காயமடைந்துள்ளனர்.

மாதம்பை, வத்துவத்த பகுதியை சேர்ந்த ரனேஸ் நிமல்ஷ என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.(இ-7)

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தலைவர் இராஜினாமா

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் தலைவர் ரஞ்சித் பெர்னாண்டோ மற்றும் பணிப்பாளர் குழு உறுப்பினர் மனோ தித்தவெல ஆகியோர் நேற்று பதவியை இராஜினாமா செய்துள்ளனர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கான புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் கடந்த ஏப்ரல் மாதம் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலங்கையின் 200 வருட நீதித்துறைக்கு வெற்றி

### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின்200 வருட நீதிதுறைக்கு கிடைத்துள்ள உன்னதமான உயரிய வெற்றி இதுவென ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு எதிர்வரும் 7ஆம் திகதி வரை இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம)

## கொலனி குடியிருப்பு மக்களை நிரந்தரமாக குடியமர்த்த வேண்டும்

### சாவகச்சேரி பிரதேசசபை உபதவிசாளர் கோரிக்கை

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்குப் பின்புறமாக அமைந்துள்ள கொலனி குடியிருப்புப் பகுதி மக்களை நிரந்தரமாக குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் மயூரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சபை அமர்வின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர்மேலும் தெரிவிக்கையில்,

குறித்த கொலனிப் பகுதியில் 15 குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இன்றி தற்காலிக கொட்டில்களில் பல வருடங்களாக வசித்து வருகின்றனர். இதனால் அவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வரு கின்றனர். குறிப்பாக மாரி காலத்தில் அவர்களுடைய குடிமனைகளுக்குள் வெள்ள நீர் புகுந்து இடப்பெயர்வினைச் சந்திக்கின்றனர். இதனால் அந்தப் பகுதி மாணவர்களது கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதுடன், சுகாதாரப் பிரச்சினைகளுக்கும முகம் கொடுக்கின்றனர்.

ஆகவே அந்தப் பகுதியில் தற்காலிகக் கொட்டில்களில் வசித்து வரும் மக்களுக்கு வெளிப்படுத்தல் உறுதி ஆவணம் வழங்கி அவர்களை குறித்த பகுதியில் நிரந்தரக் குடிகளாக குடியமர்த்த பிரதேச சபையில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

உபதவிசாளரது இக் கோரிக்கை சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானமாக்கப்பட்டது. (இ-30)

## உரிய விதிமுறைகளை பின்பற்றாது மலசலகூடம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் வீட்டுத்திட்ட வீடுகள் உள்ளிட்ட வீடுகளுக்கு மலசலகூடம் அமைக்கும் போது மககள் உரிய விதிமுறைகளைப் பின்பற்றாமல் அமைக்கின்றனர். அதனை பிரதேச செயலகத்தினர் கவனத்தில் கொள்ள வேண்டும் என சாவகச்சேரி நகர சபையின் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி நகர சபையில் அண்மையில் இடம்பெற்ற அமர்வின்போது உதயசூரியன் மற்றும் மகிழங்கேணிப் பகுதியில் உரிய விதிமுறைகளைப் பின்பற்றாது மலசலகூடம் அமைக்கப்பட்டதாக சபை உறுப்பினர்கள் தெரிவிக்கும்போதே சுகாதாரப் பிரிவினர் இதனைத் தெரிவித்தனர்.

பல இடங்களில் அனுமதி இன்றி மலசலகூடங்கள் அமைக்கப்படுகின்றன. இதனால் கிணற்று நீர் அசுத்தமடைதல் உள்ளிட்ட சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக நகர சபையினர் பிரதேச செயலருக்கு கடிதம் ஒன்றினை வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் நகரை அண்டியுள்ள, சன நெருக்கடி அதிகம் உள்ள பகுதிகளில் கட்டாயம் மலசலகூடக் குழி கீழே கொங்கிறீட் இடப்பட்டதாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (இ-30)

## ஓய்வுப் பொழுதைக் கழிக்க...

- கிடைக்கும் ஒய்வு நேரத்தைக் குடும்பத்தினருடன் இன்பமாய் போக்குங்கள்.
- சிறிது ஓய்வாக இருந்துவிட்டு நீங்களே வீட்டைப் பராமரியுங்கள்
- நல்ல புத்தகங்களை வாங்கிப் படித்துப் பயனுள்ள கருத்தைப் பின்பற்றுங்கள்
- குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து மகிழ்ச்சியளிக்கக்கூடிய இடங்களுக்குச் சென்று வாருங்கள
- ஓய்வு என்பது ஓய்வாக இருக்கத்தானே தவிர உறக்கத்திற்கு அல்ல என்பதையும் அறிந்திடுங்கள்.
- இயற்கையை நேசியுங்கள். ஓய்வுப் பொழுதை இனிமையாய், அருமையாய்க் கழித்திடுங்கள்

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### பயனுள்ளதைச் செய்



✦ பிறருடைய குறைகளைச் சிந்தித்து பொழுதை வீணாக்காதே. எப்போதும் பயனுள்ள பணியில் ஈடுபடு.

✦ எங்கு தேடினாலும் கடவுளைக் காண முடியாது. அவர் உன் உள்ளத்திலேயே குடி கொண்டிருக்கிறார்.

✦ பெருமை பேசாதே. உன்னிலும் செல்வம் படைத்தவர் பலர் உலகில் இருக்கவே செய்கிறார்கள்.

✦ உலக வாழ்வில் இருந்து கொண்டே மனதை அடக்கி ஆள்பவனே சிறந்த வீரன்.

✦ கடின முயற்சி உள்ளவனுக்கு எல்லாம் உண்டாகும். அது இல்லாதவனுக்கு ஒன்றும் கிடைக்காது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

"சாகுமுன் உன் பாட்டன் நாட்டிய
பழமரங்களைக் கேட்டுப்பார்
உனது பரம்பரையின் கனவுகளை
இன்னமும் அது வைத்திருக்கக்கூடும்"

~கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில வலைப்பாடு, வேராவில், கிராஞ்சி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பூந்தோட்டம் கிராமம், தோணிக்கல் கிராமம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில நானாடடான் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

# மகளிர் உலகக்கிண்ண இருபது-20

# இங்கிலாந்து அணி அபார வெற்றி






மகளிர் இருபது-20 உலகக் கிண்ண் தொடரின் நேற்றைய போட்டியில், பங்களாதேஷ் அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வீழ்த்தியுள்ளது.

மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வரும் பெண்களுக்கான இருபது-20 உலகக் கிண்ண தொடரின் நேற்றைய ஆட்டத்தில் இங்கிலாந்து-பங்களாதேஷ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் மகளிர் அணி இங்கிலாந்து வீராங்கனைகளின் அபாரா பந்துவீச்சினால் 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 76 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

அந்த அணியின் தொடக்க வீராங்கனை அயஷா ரஹ்மான் அதிகபட்சமாக 39 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து அணி தரப்பில் கிரிஸ்டி கோர்டோன் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

அதன் பின்னர் மழை பெய்ததால், இங்கிலாந்து அணிக்கு 16 ஓவர்களில் 64 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்று இலக்கு மாற்றியமைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய இங்கிலாந்து அணி 9.3 ஓவர்களிலேயே 3 விக்கெட் இழப்புக்கு 64 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக எமி எலன் ஜோன்ஸ் 28 ஓட்டங்களும், சிவர் 23 ஓட்டங்களும் எடுத்தனர். இந்த வெற்றியால் இங்கிலாந்து அணி தனது பிரிவில் ஒரு வெற்றியுடன் மூன்று புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளது. (க)

## இரண்டுமுறை இரட்டைச்சதம்; விக்கெட் கீப்பர் ரஹீம் சாதனை



டெஸ்ட் வரலாற்றிலேயே 2 இரட்டை சதங்கள் அடித்த விக்கெட் கீப்பர் என்ற உலக சாதனையை பங்களாதேஷ் விக்கெட் கீப்பர் முஷ்பிகுர் ரஹீம் படைத்துள்ளார்.


சிம்பாவே அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி விளையாடி வருகிறது.

டாக்காவில் நடைபெறும் இப்போட்டியின் போது பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுக்கு 522 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

அந்த அணியின் விக்கெட் கீப்பர் முஷ்பிகுர் ரஹீம் அபாரமாக ஆடி இரட்டைச்சதம் விளாசினார். அவர் 421 பந்துகளில் 18 பவுண்டரிகள், ஒரு சிக்சருடன் 219 ஓட்டங்கள் எடுத்து நொட்-அவுட் ஆக இருந்தார்.

இது அவருக்கு இரண்டாவது இரட்டைச்சதமாகும். இதன்மூலம், டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 2 முறை இரட்டைச்சதம் விளாசிய விக்கெட் கீப்பர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். (க)

## பங்களாதேஷ் கிரிக்கெட் அணி தலைவர் மோர்தசா தேர்தலில் போட்டியிடுகிறார்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களில் ஒருவர் மோர்தசா. டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வுபெற்ற மோர்தசா, ஒருநாள் போட்டியில் தலைவராக செயற்பட்டு வருகிறார். இந்நிலையில் பங்களாதேஷில் நடைபெறும் தேர்தலில் போட்டியிட உள்ளார்.

பங்களாதேஷில் அடுத்த மாதம் 23 ஆம் திகதி தேர்தல் நடக்கிறது. இதில் மோர்தசாவை களம் இறக்க பிரதமர் ஷேக் ஹசினாவின் அவாமி 'லீக்' முடிவு செய்துள்ளது. தேர்தலில் போட்டியிட மோர்தசாவும் சம்மதித்துவிட்டார் என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

அவரது சொந்த தொகுதியான நரேலில் போட்டியிடுகிறார். ஆனால் இது குறித்து மோர்தசா வெளிப்படையாக எதுவும் தெரிவிக்கவில்லை. 2009 இல் டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்ற அவர் ஒருநாள் போட்டியில் 252 விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

தற்போது பங்களாதேஷ் அணிக்காக விளையாடி வரும் வீரர் அரசியலில் போட்டியிட எந்தவித தடையும் இல்லை என்று தெரிவித்துள்ளது.

இதனால் மோர்தசா அரசியலில் களம் இறங்க எந்தச் சிக்கலும் இருக்காது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## ஆட்ட நாயகனான குப்பை அகற்றும் தொழிலாளி; இந்திய கிரிக்கெட் சபையை கண்டித்து கருத்து




இந்தியா-மேற்கிந்தியத் தீவுகள் மோதிய போட்டியில் ஆட்ட நாயகன் விருதை ஜடேஜா பெற்ற நிலையில் அந்த விருது குப்பைகளை அகற்றும் ஊழியர் கையில் இருக்கும்புகைப்படம் இணையத்தில் வலம் வருகிறது.

கடந்த முதலாம் திகதி இந்தியா-மேற்கிந்தியத்தீவு அணிகள் மோதிய ஐந்தாவது ஒருநாள் போட்டியில் ஜடேஜா ஆட்ட நாயகன் விருது வென்றார்.

பொதுவாக கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கப்படும் ஆட்ட நாயகன் விருது என்பது ஒரு பெரிய அட்டையில் விளம்பரதாரர் பெயர்களோடு, செக் மதிப்பு குறிக்கப்பட்டு இருக்கும்.

இந்த அட்டையை உண்மையில் வங்கியில் செலுத்த முடியாது. மக்கள் தெளிவாகப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே இந்த அட்டை பெரிதாக வடிமைக்கப்பட்டு இருக்கிறது.

ஆட்டநாயகன் விருது வாங்கும் வீரருக்கு அதற்கான தொகை வேறு முறையில் வழங்கப்படும். இந்நிலையில் ஐந்தாவது ஒருநாள் போட்டி முடிந்த உடன் ஜடேஜா 4 விக்கெட்டுகள் வீழ்த்தியதற்காக ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது. அதில் ஒரு இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டு இருந்தது. அந்த ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்ட அட்டை இப்போது குப்பையில் கிடக்கிறது.

இந்த விருது அட்டை குப்பையில் கிடப்பதை படமாக எடுத்து தன் பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார் ப்ராக்ருதி என்ற நபர். அவர் அதில் இயற்கையை பாதிக்கும் வகையில் இந்த பிளாஸ்ரிக் பொருளால் தயாரான விருது அட்டை குப்பையிலே கிடக்கிறது.

மரியாதை அளிக்கும் வகையில் வழங்கப்படும் ஒரு விருதை பிசிசிஐ ஏன் இப்படி வெறும் பிளாஸ்ரிக் அட்டையாக வழங்கி, வீரர்களுக்கும் ஞாபகார்த்தமாக இல்லாமல், இயற்கைக்கும் கேடு விளைவிக்கும் வகையில் செயற்படுகிறது என கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த அட்டையை பிடித்துக் கொண்டு போட்டோவுக்கு போஸ் கொடுக்கும் குப்பை அகற்றும் ஊழியர் தான் இப்போது ஆட்ட நாயகன் எனவும் குறிப்பிட்டு குப்பை அகற்றுபவர்களின் முக்கியத்துவத்தையும் கூறியுள்ளார். (க)

## ஒருநாள் கிரிக்கெட் தரவரிசை விராட் ஹோலி-பும்ரா முதலிடம்



ஐ.சி.சி. ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் இந்திய அணி தலைவர் விராட் ஹோலி 899 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார். ரோகித் சர்மா 2 ஆவது இடத்தில் உள்ளார். ஷிகர் தவான் 9 ஆவது இடத்தில் இருந்து 8 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் பும்ரா 841 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடம் வகிக்கிறார். குல்தீப் யாதவ் மூன்றாவது இடத்திலும் சாஹல் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

சகலதுறை ஆட்டக்காரர் தரவரிசையில் ரஷித் கான் 353 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். (க)

## அரசியல் யாப்...

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆகவே அரசியல்யாப்பை விளையாட்டாக கருதி உதைப் பந்தாட்டம் விளையாடக்கூடாதென அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றை கலைக்கும் வகையிலான ஜனாதிபதியின் வர்த்தமானிக்கு உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்த பின்னர், அலரி மாளிகையில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மக்களின் இறையாண்மைக்கு நேற்று பதில் கிடைத்துள்ளது. அத்தோடு, அரசியல் யாப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது. அரச ஒழுக்க விழுமியங்கள் முன்னேற்றம் கண்டுள்ளன.

அரசியல் யாப்பை கிழித்தெறிய முற்பட்டபோது, அரசியல் யாப்பை உதைத்தெறிந்து செல்ல முடியாதென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தற்போது ஆட்சேபங்களை தெரிவிக்க நீதிமன்றம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது. நாம் அதற்குரிய காரணங்களை தெரியப்படுத்துவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

நாடாளுமன்றின் அதிகாரத்தையும் கௌரவத்தையும் காப்பாற்றியமைக்காக சபாநாயகர் கரு ஜயசூரியவிற்கு நன்றி தெரிவிக்க வேண்டும். அவரின் செயற்பாடுகள் காரணமாகவே நாட்டில் இன்று ஜனநாயகம் காணப்படுகிறது.

அடுத்ததாக இதற்காக உழைத்த அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். மும்மத தலைவர்களுக்கும் எமது நன்றிகள்.

இவை அனைத்தையும் மக்களின் அடிப்படை உரிமையையும் அரசியல் யாப்பை பாதுகாக்கவும் முனைந்தோம்.

அரசியலமைப்பை பயன்படுத்தி யாரும் உதைப்பந்தாட்டம் விளையாடமுடியாது. அதேபோல் அரசியல் யாப்பை ஒருவர் நினைத்தவாறு மாற்ற முடியாது. அதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை. இது தற்காலிக வெற்றி மாத்திரமே. எமது தொடர் போராட்டத்தை வெற்றி கொள்ள வேண்டும். நாடாளுமன்றில் பெரும்பான்மையை காண்பிப்போம். அதற்கமைய இன்று நாடாளுமன்றில் ஒன்றுகூடுவோம். நாடாளுமன்றத்தை சபாநாயகர் கூட்டவில்லை. மாறாக ஜனாதிபதியே கூட்டியுள்ளார். எனவே இன்று நாடாளுமன்றில் எமது அதிகாரத்தை காட்டுவோம். ஆகவே அரச ஊழியர்களை அரசியலமைப்பிற்கு இணங்க செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உயர் நீதிமன்ற தீர்ப்பிற்கமைய செயற்படுங்கள். நாடாளுமன்றத்தை மதித்து செயற்படுங்கள். சபாநாயகரை பொலிஸார் சந்தித்து விடயங்களை தெளிவுபடுத்திக்கொள்ள முடியும். இந்த வெற்றியை கொண்டாட 15ஆம் திகதி லிப்டன் சுற்றுவட்டத்தில் ஒன்றுகூடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார். (ம)

## எதிர்வரும் 7...

எதிர்க்கட்சிகளினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை பரிசீலித்த உயர்நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதன்போதே நீதிமன்றம் மேற்கண்டவாறும் தேர்தல்கள் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் மற்றும் தேர்தல் முன்னாயத்த நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுப்பதற்கும் இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம)

## சு.க.இருவர் நேற்று இரவு ஐ.தே.கவில் சங்கமம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களான ஏஎச்எம் பௌசி மற்றும் பியசேன கமகே ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளனர். அவர்கள் இருவரும் நேற்றிரவு அலரி மாளிகைக்குச் சென்று ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெறிச்சோடச் செய்யும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கைகளில் அதிருப்தி கொண்டே அவர்கள் இருவரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

## பதவியிலிருந்து விலகுவதாக...

தான் வைத்திருப்பது தனது சுய மதிப்பிற்கு பாதிப்பு ஏற்படுத்தும். எனவே பதவியை இராஜினாமா செய்கிறேன் என மகிந்த குறிப்பிட்டுள்ளார் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இருப்பினும் இது தொடர்பில் ஜனாதிபதி ஊடக இயக்குனரிடம் வினவ முற்பட்ட போது அவரது தொலைபேசி செயல் இழந்து காணப்பட்டுள்ளதாக குறித்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைத்தமைக்கு எதிராக உயர் நீதிமன்றினால் இடைக்கால தடை உத்தரவு விதித்துள்ள நிலையில், மகிந்தவின் பதவி விலகல் தொடர்பான தகவல் வெளியாகி உள்ளது.

பாராளுமன்றம் இன்று கூடவுள்ளது. இதன்போது பதவி நீக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மை நிரூபித்து மீண்டும் பிரதமர் பதவியை பெற்றுக் கொள்வார்.

இதனை முன்னரே அறிந்து கொண்ட மகிந்த ராஜபக்ஷ தனது பதவியை விட்டு விலகும் நிலைப்பாட்டுக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## ஜனாதிபதியின் உத்தரவுக்கு...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றை கலைத்து பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கும் வர்த்தமானியை வெளியிட்டார்.

ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்யுமாறு கோரி 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்களும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை சரியானதே என கூறி 5 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

குறித்த மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்த உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் நளின் பெரேரா தலைமையில் பிரியந்த ஜயவர்தன மற்றும் பிரசன்ன ஜயவர்தன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் இரண்டு நாட்களாக விசாரித்தது. இந்த நிலையில் நேற்று மாலை ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்கால-தடையுத்தரவு விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் 7ஆம் திகதி வரை இந்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான அடுத்த விசாரணை டிசெம்பர் 5ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை இடம்பெறும் என்றும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ம)

## தேர்தலுக்கான...

பிரதமரின் இல்லத்திலுள்ள அவரது தற்போதைய அலுவலகத்தில் செய்தியாளர்கள் மாநாட்டில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கவில்லை.

இந்தச் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயர் நீதிமன்றின் இடைக்காலத் தடை உத்தரவை வரவேற்கின்றோம். இது இறுதித் தீர்ப்பு இல்லை.

ஒரு புதிய பாராளுமன்றத்திற்கான தேவையை வலியுறுத்தி சட்டரீதியான போரில் தொடர்ந்து ஈடுபடுவோம் என்று அமைச்சர் தினேஸ் குணவர்த்தன குறிப்பிட்டார்.

சபாநாயகர் இன்று ஒரு பிரதமரை நியமிப்பார் என்று சிலர் எதிர்பார்த்திருக்கிறார்கள். அதைச் செய்ய அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஜனாதிபதிக்கு மட்டும்தான் பிரதமரை நியமிக்கும் அதிகாரம் உண்டு என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (ம)

## வெடிகொழுத்தி...

நேற்று அளித்திருந்த தீர்ப்பை வரவேற்று கொழும்பில் பல இடங்களில் பட்டாசு கொழுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவித்துள்ளனர். (ம)

## ஜனாதிபதி...

உள்ளிட்ட அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

தேசிய பாதுகாப்பு சபை நேற்றிரவு 8.00 மணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஒன்றுகூடியது.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

நாட்டில் நிலவும் அமைதியான சூழலை மேலும் பலப்படுத்துமாறு ஜனாதிபதி இதன்போது அனைத்து பாதுகாப்புத்துறை பிரதானிகளுக்கும் பணிப்புரை விடுத்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

## இலங்கை...

பட்டுள்ளது என மங்களசமரவீர தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற தீர்ப்பு வெளியான பின்னர் அவர் தனது டுவிட்டர் செய்தியில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் ஜனநாயகம் சர்வாதிகாரத்தின் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ள மங்கள சமரவீர பிரதமநீதியரசரிற்கும் நீதிமன்றிற்கும் நன்றி என குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தின் ஆட்சி மீண்டும் இயங்குகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## நாளை கொழும்பில்...

அறிவித்தார்.

இதேவேளை, நாளை ஜனநாயகத்தை மதிக்கும் சகலரும் கொழும்பில் ஒன்று கூடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பீ.பெரேரா அறிவித்தார்.

பல்லாயிரக் கணக்கானவர்களை கூட்டி இந்த அரசாங்கத்துக்கு தமது எதிர்ப்புக்களை வெளிக்காட்டவுள்ளதாகவும் நேற்று மாலை உயர் நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அஜித் எம்.பி. மேலும் கூறினார். (ம)

## பரபரப்பான சூழலில்...

தலுக்கு அமைய பாராளுமன்றம் கூடும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாராளுமன்ற அமர்வில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## கட்சித் தலைவர்...

கர் அலுவலகம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தை கலைக்கும் வகையில் ஜனாதிபதி விடுத்த வர்த்தமானி அறிவித்தலுக்கு உயர் நீதிமன்றத்தால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட நிலையில் சபாநாயகர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (ம)

## யாழ்.குடா...

என வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் ஊடாக மணிக்கு 100 கிலோ மீற்றர் வரை கடும் காற்று ஏற்படக் கூடுமென அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அதேபோல், வட மாகாணத்தின் சில பிரதேசங்களில் 100 மி.மீக்கும் அதிகமான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக வானிலை அவதான நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



இனுவில் கந்தசுவாமி
கோவில் கந்தசஷ்டி
விரத பெருவிழாவை
தொடர்ந்து
ஆறுபடை முருகன்
உற்சவம்
காலம் : 15.11.2018 வியாழக்கிழமை
காலை 8.00 மணிக்கு 108 வலம்புரி சங்காபிஷேகம்,
மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை நடைபெற்று
சுவாமி திருவீதி உலாக் காட்சி நடைபெறும்.
விசேட மேளக்கச்சேரி மாலை 4.30 மணிக்கு
நாதஸ்வர கலாபூஷணம்
V.K.பஞ்சமூர்த்தி
R.இரத்தினகுமார்
K.P.குமரன்
K.நாகதீபன்
பு.பிருந்தாவன்

தவில்
சக்கரவர்த்தி
T.உதயசங்கர்
த.சதீஸ்குமார் (குட்டி)
N.பிரசன்னா (சுப்ளி)
V.P.வியூர்ணன்
ஆறுபடை முருகனை தரிசித்து திருவருளை பெறுவீர்களாகுக
தர்ம கர்த்தா சபையினரும், உபயகாரரும், இனுவில் கந்தசுவாமி கோவில்.


கொவிசெத
திகதி 2018.11.13
சீட்டிழுப்பு இலக்கம் 1942
ஆங்கில எழுத்து V
வெல்லப்பட்ட இலக்கங்கள் 26 32 69 77
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/11/13
சீட்டிழுப்பு இலக்கம் 3789
ஆங்கில எழுத்து H
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 5 1 5 8 3
தேசிய லொத்தர் சபை

சேவன
திகதி 2018/11/13
சீட்டிழுப்பு இலக்கம் 135
ஆங்கில எழுத்து O
வெல்லப்பட்ட இலக்கங்கள் 04 08 10 59
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2018/11/13
சீட்டிழுப்பு இலக்கம் 472
லக்கினம் இடபம்
வெற்றி இலக்கங்கள் 16 29 30 38 64
தேசிய லொத்தர் சபை

## சாரதி தேவை

பத்துச்சில்லு லொறிகளுக்கு சாரதிகள் தேவை. முன்பு வேலை செய்த இடத்தில் இருந்து விலகல் கடிதம் பெற்றுக்கொண்டு நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - சிற்றி ஹாட்வெயர்
அன் ஸ்ரோர்ஸ்
இல.55/57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C-4402)



வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

070 330 5500

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

(C-4391)


## கிளிநொச்சியில்...

இது தொடர்பில் உறவினர்கள் தெரிவிக்கையில் குமாரபுரம் புன்னை நீராவியடியினை சேர்ந்த முன்னாள் போராளியான இவர் மூன்று ஆண்டுகளாக புனர்வாழ்வு பெற்று குடும்பத்துடன் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர்திருமணமமுடித்த இவருக்கு பெண் குழந்தை ஒன்றும் உள்ளது. இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டில் திடீரென உயிரிழந்துள்ளார்.

இவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மரண விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-281)


## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-4381)



## அரியதோர் வேலைவாய்ப்பு

எமது ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனமான EDM, 7ஆவது கிளையினை ஆரம்பிக்கவுள்ளதால் 30 பதவி வெற்றிடங்களை நேர்முகத் தேர்வினூடாக பூர்த்தி செய்யவுள்ளது.

O/L, A/L மற்றும் மேற்தகைமையுடையோர் கலந்து கொள்ளலாம்.
தகைமை அற்றோர்க்கு பயிற்சியுடன் பதவிகள் வழங்கப்படும்.
பயிற்சியின் போது, சம்பளம் 15000 - 20000 வரையும் பயிற்சியின் பின்னர் 40000 - 60000 வரையும் பெற்றுக்கொள்ளலாம்.
வெளிமாவட்டங்களில் இருந்து வருவோர்க்கு தங்குமிட வசதி உண்டு.
EPF, ETF வசதிகள் உண்டு.
வெளிநாட்டு வேலைவாய்ப்பு போன்ற வசதிகளும் உண்டு.

தொடர்புகளுக்கு : 077 985 8580 / 077 517 9034

(6446)



## காணி விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி சங்கத்தானை புகையிரத நிலையத்தில் இருந்து 500 M தூரத்தில் 3 1/2 பரப்பு, 02 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :
077 418 0558

(6436)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# CHEMISTRY

## DIAS B.Sc(Hons).Spl. in Chem.

## A/L 2019 Model Exam-1 October 2018


NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

NEW SCIENCE WORLD


| Sr.No | Index No | Full Name | School | Med | Ave | Rank |
|---|---|---|---|---|---|---|
| 1 | J/8235/B | Arulanantham Abbinanthan | J/J.H.C | Tam | 97.8 | 1 |
| 2 | J/8202/B | Jeyanandarasa Kirushikan | J/J.H.C | Tam | 95.5 | 2 |
| 3 | J/8098/B | Anisha Jude Joachimson | J/C.G.C | Tam | 94.5 | 3 |
| 4 | J/8200/B | Sivathasan Tharsikan | J/J.H.C | Tam | 94 | 4 |
| 5 | J/7076/M | Nagaraththinam Thenujan | J/J.H.C | Tam | 93 | 5 |
| 6 | J/8109/B | Linthuya Kalaithasan | J/V.G.H.S | Tam | 92 | 6 |
| 7 | J/7043/M | Kanagarajah Thanushanth | J/J.H.C | Tam | 90.5 | 7 |
| 8 | J/7009/M | Ragunathan Athyraiyan | J/J.H.C | Tam | 90 | 8 |
| 9 | J/7268/M | Suvethiga Jeyanthan | J/V.G.H.S | Tam | 89.5 | 9 |
| 10 | J/8410/B | Nivetha Mahalingasivam | J/V.G.H.S | Eng | 89 | 10 |
| 11 | J/7335/M | Thevarasa Sangaran | J/V.C.C | Tam | 88 | 11 |
| 12 | J/8038/B | Snoha Nagulendran | J/V.G.H.S | Eng | 87.5 | 12 |
| 13 | J/7089/M | Thevakumar Jubeerathan | J/K.H.C | Tam | 87 | 13 |
| 14 | J/8136/B | Logitha Thayaseelan | J/J.H.L.C | Tam | 87 | 13 |
| 15 | J/8326/B | Thayaparan Nisan | J/J.H.C | Tam | 87 | 13 |
| 16 | J/7030/M | Sivarasa Nishanthan | J/J.H.C | Tam | 87 | 13 |
| 17 | J/7290/M | Sivatheepan Thanikan | J/S.J.C | Tam | 87 | 13 |
| 18 | J/8441/B | Thiviya Mohanathan | J/V.G.H.S | Tam | 86 | 18 |
| 19 | J/8550/B | J.Ronald Janushan | J/S.H.C | Tam | 85.5 | 19 |
| 20 | J/7006/M | Raveendra Jathushan | J/J.H.C | Tam | 85.5 | 19 |
| 21 | J/8565/B | Arunkalaichelvan Anoshigan | J/S.J.C | Eng | 85 | 21 |
| 22 | J/8253/B | Arunthavanesan Thanushiyan | J/J.H.C | Tam | 84.5 | 22 |
| 23 | J/7177/M | Baskarasabesan Pathmaniroshan | J/J.H.C | Tam | 84.5 | 22 |
| 24 | J/8181/B | Sivathasan Tharmathasan | J/J.H.C | Eng | 84.5 | 22 |
| 25 | J/7159/M | Kanagalingam Lithurshan | J/J.H.C | Tam | 84.5 | 22 |
| 26 | J/8180/B | Ilango Elankethan | J/J.H.C | Eng | 84 | 26 |
| 27 | J/7212/M | Pairavi Thanancheyan | J/V.G.H.S | Tam | 84 | 26 |
| 28 | J/8299/B | Kunarajah Kunadiluxshan | J/J.H.C | Tam | 83.5 | 28 |
| 29 | Mn/7404/M | J.S.Emiriyan Croos | Mn/S.M.M.V | Tam | 83.5 | 28 |
| 30 | J/8005/B | Sriskantharajah Vishnujan | J/J.H.C | Tam | 83 | 30 |
| 31 | J/8328/B | Mahendran Thanujan | J/K.H.C | Tam | 82.5 | 31 |
| 32 | J/8168/B | Sriskantharajah Jeyavakeesan | J/J.C.C | Tam | 82.5 | 31 |
| 33 | J/7304/M | Sathurgini Uthayakumar | J/V.G.H.S | Tam | 82 | 33 |
| 34 | J/8070/B | Keerthika Johnquintus | J/V.G.H.S | Tam | 82 | 33 |
| 35 | J/8126/B | Tharani Balandran | J/V.G.H.S | Eng | 82 | 33 |
| 36 | J/8218/B | Anantharajah Janushan | J/J.H.C | Eng | 81.5 | 36 |
| 37 | Mn/8594/B | Kulathunga Dilanthan | Mn/S.X.B.C | Tam | 81.5 | 36 |
| 38 | J/7380/M | Nagarajah Vithushan | J/J.C.C | Tam | 81 | 38 |
| 39 | J/7201/M | Poorvajaa565Suntha reswarasarma | J/V.G.H.S | Tam | 81 | 38 |
| 40 | J/8120/B | Thabothini Vasavan | J/V.G.H.S | Eng | 81 | 38 |
| 41 | J/7289/M | Saundrarajan Lithushan | J/S.J.C | Eng | 80.5 | 41 |
| 42 | J/8177/B | Muralitharan Thanushan | J/S.J.C | Eng | 80 | 42 |
| 43 | Mu/8556/B | Vaishnavy Gengatheeswaran | Mu/U.M.V | Tam | 80 | 42 |
| 44 | J/8368/B | Thusharaa Sriskandarajah | J/V.G.H.S. | Tam | 76.5 | 44 |
| 45 | J/7010/M | Arudchelvan Harishanth | J/J.H.C | Eng | 76.5 | 44 |
| 46 | J/7144/M | Navaratnam Baanujan | J/J.H.C | Tam | 78 | 46 |
| 47 | J/7548/M | Pavithra Gnanaganthan | J/K.H.C | Tam | 78 | 46 |
| 48 | J/8124/B | Abiramy Devanesan | J/V.G.H.S | Eng | 78 | 46 |
| 49 | J/5412/M | Shankavi Kandappu | J/V.G.H.S | Tam | 78 | 46 |
| 50 | J/8072/B | Tharmashaavine Sivathasan | J/V.G.H.S | Tam | 77.5 | 50 |
| 51 | J/7092/M | Panchalingam Kobinarth | J/J.H.C | Eng | 77 | 51 |
| 52 | J/8537/B | Rathisiya Ravichandran | J/K.H.C | Tam | 77 | 51 |
| 53 | J/7163/M | Sivasothynathan Kugeshan | J/J.H.C | Eng | 76.5 | 53 |
| 54 | J/7133/M | Premkumar Sanujen | J/J.H.C | Tam | 76.5 | 53 |
| 55 | J/8192/B | Krishnakumar Mathurangan | J/J.H.C | Eng | 76.5 | 53 |
| 56 | Kn/8561/B | Pathmasenan Palasuthan | Kn/M.M.V | Tam | 76 | 56 |
| 57 | J/7045/M | Sathakaran Thisenthan | J/S.H.S | Tam | 75.5 | 57 |
| 58 | J/8179/B | Sunthareswaran Subangan | J/J.H.C | Eng | 75.5 | 57 |
| 59 | J/8489/B | Nagapatham Thamilinban | J/J.H.C | Eng | 75.5 | 57 |
| 60 | J/7529/M | Nithiyananthan Aathavan | J/J.H.C | Eng | 75 | 60 |
| 61 | J/8285/B | Maheswaran Royal Pratheep | J/S.J.C | Eng | 74.5 | 61 |
| 62 | J/8665/B | Geevitha Thavanathan | J/C.H.C | Tam | 74.5 | 61 |
| 63 | J/8338/B | Sritharan Subaas | J/J.H.C | Eng | 74 | 63 |
| 64 | J/7198/M | Meenambika Chandrakumar | J/C.G.C | Eng | 74 | 63 |
| 65 | J/8227/B | Tharshana Vinsalas | J/V.G.H.S | Tam | 73 | 65 |
| 66 | J/7152/M | Murukananthan Nithujan | J/J.H.C | Tam | 73 | 65 |
| 67 | J/8428/B | Clare Stephi Kingsly Robert | J/C.G.C | Tam | 73 | 65 |
| 68 | J/7214/M | Shabthana Johnson | J/K.H.C | Tam | 73 | 65 |
| 69 | J/8198/B | Mahenthiran Iynthuran | J/S.C | Tam | 73 | 65 |
| 70 | J/8409/B | Nilany Sriskandharaja | J/V.C.C | Tam | 73 | 65 |
| 71 | J/5403/M | Varunanantharasa Pavitharan | J/J.H.C | Tam | 73 | 65 |
| 72 | J/7064/M | Sivananthanathan Apisathan | J/J.H.C | Tam | 73 | 65 |
| 73 | J/8467/B | Gayathri Sivaneswaran | J/V.G.H.S | Eng | 73 | 65 |

| Sr.No | Index No | Full Name | School | Med | Ave | Rank |
|---|---|---|---|---|---|---|
| 74 | J/7522/M | Kumarasamy Garthikan | J/J.H.C | Tam | 72.5 | 74 |
| 75 | J/7011/M | Sarvendran Birunthaban | J/J.H.C | Eng | 72.5 | 74 |
| 76 | J/7295/M | Thooyakumaran Paul Gajenthiran | J/S.J.C | Tam | 72 | 76 |
| 77 | J/7347/M | Suharnan Karuneyan | J/J.H.C | Tam | 72 | 76 |
| 78 | J/8063/B | Sankeerani Govindarajan | J/V.J.C | Eng | 72 | 76 |
| 79 | J/8156/B | Sankavi Rasanayakam | J/V.G.H.S | Tam | 72 | 76 |
| 80 | Mn/8129/B | Mathusalini Mariyanayakam | Mn/S.X.G.C | Tam | 72 | 76 |
| 81 | J/7503/M | Ravishankar Banujan | J/J.H.C | Eng | 72 | 76 |
| 82 | J/7266/M | Bilahari Sukumar | J/V.G.H.S | Eng | 71.5 | 82 |
| 83 | J/8062/B | Sagithira Krishnabala | J/V.G.H.S | Tam | 71 | 83 |
| 84 | J/7114/M | Sivasothy Piranavan | J/J.H.C | Eng | 71 | 83 |
| 85 | J/8036/B | Thushanthi Viswanathan | J/V.H.C | Tam | 71 | 83 |
| 86 | J/7286/M | Tharmarasa Senthan | J/V.C.C | Tam | 71 | 83 |
| 87 | J/7131/M | Pavalakanthan Rajeev | J/J.H.C | Tam | 71 | 83 |
| 88 | J/8131/B | Adsaya Santhirasegaram | J/V.G.H.S | Eng | 71 | 83 |
| 89 | Mu/7463/M | Thavamohan Thananchayan | Mu/M.C.C | Tam | 71 | 83 |
| 90 | J/7511/M | Nithursika Kalanantharasan | J/V.G.H.S | Tam | 70.5 | 90 |
| 91 | J/8178/B | V. Hamshaananth | J/J.H.C | Eng | 70.5 | 90 |
| 92 | J/8194/B | K. Suthananth | J/J.H.C | Eng | 70 | 92 |
| 93 | J/8567/B | Nanthakumar Thusyanthan | J/J.H.C | Tam | 70 | 92 |
| 94 | J/7077/M | Yogendrarajah Sathveegan | J/J.H.C | Tam | 70 | 92 |
| 95 | J/8540/B | Yogeswaran Vinojan | J/V.C.C | Tam | 69.5 | 95 |
| 96 | J/8626/B | Narayane Kathiramalai | J/V.G.H.S | Eng | 69.5 | 95 |
| 97 | J/8066/B | Luxshika Rajasoorie | J/V.G.H.S | Tam | 69 | 97 |
| 98 | J/8195/B | Aranee Gunatheesan | J/V.G.H.S | Tam | 69 | 97 |
| 99 | J/8252/B | Ariyaratnam Baveththiran | J/J.H.C | Tam | 69 | 97 |
| 100 | J/7003/M | Vasanthan Vathsalayan | J/J.H.C | Eng | 69 | 97 |
| 101 | J/8228/B | Jenusija Jerad | J/V.G.H.S | Tam | 69 | 97 |
| 102 | Mn/8535/B | Mario Lidvika Mariyan Nesan | Mn/N.M.V | Tam | 69 | 97 |
| 103 | J/7426/M | Ratnakumar Sivajan | J/M.H.C | Tam | 69 | 97 |
| 104 | J/8189/B | Baviththira Srikumaran | J/V.G.H.S | Tam | 68.5 | 104 |
| 105 | J/8095/B | Delaxsana Thavarasa | J/V.G.H.S | Tam | 68.5 | 104 |
| 106 | J/8349/B | Jegatheeswaran Venujan | J/J.H.C | Tam | 68.5 | 104 |
| 107 | J/8019/B | Kugaveni Rajarajeswaran | J/V.G.H.S | Eng | 68.5 | 104 |
| 108 | J/7262/M | Kiruthika Nanthakumaran | J/V.G.H.S | Eng | 68.5 | 104 |
| 109 | J/7035/M | Birashalyee Suthahar | J/J.H.L.C | Tam | 68 | 109 |
| 110 | J/8560/B | Kugansan Abaragithan | J/J.H.C | Tam | 68 | 109 |
| 111 | J/5407/M | Ravichandran Kirushanthan | J/J.H.C | Tam | 68 | 109 |
| 112 | J/7013/M | Kokilathasan Vithushan | J/J.H.C | Tam | 68 | 109 |
| 113 | J/7363/M | Kayalvizhi Susan | J/V.G.H.S | Tam | 68 | 109 |
| 114 | J/7455/M | Thasavaran Nithusikan | J/J.H.C | Tam | 68 | 109 |
| 115 | J/8462/B | Vaishnavi Chandrakanth | J/J.H.L.C | Tam | 68 | 109 |
| 116 | J/7736/M | Thuwaraha Ranjan | J/J.H.L.C | Tam | 67 | 116 |
| 117 | J/7069/M | Thulasitharan Achsuthan | J/J.H.C | Tam | 67 | 116 |
| 118 | J/7364/M | Gnanamathuri Ellangognaniar | J/V.G.H.S | Tam | 67 | 116 |
| 119 | J/8603/B | Ramanitharan Kanishkar | J/J.H.C | Tam | 67 | 116 |
| 120 | J/8544/B | Vijayarajah Vithursan | J/M.M.E.S | Tam | 67 | 116 |
| 121 | J/8596/B | Jayavaishali Sriskantharaja | J/V.G.H.S | Tam | 67 | 116 |
| 122 | J/8041/B | Sakithya Jeyamohan | J/V.G.H.S | Eng | 66.5 | 122 |
| 123 | J/8092/B | Dinoja Mariyaderence | J/V.G.H.D | Tam | 66.5 | 122 |
| 124 | J/8091/B | Diroja Mariyaderence | J/V.G.H.D | Tam | 66.5 | 122 |
| 125 | J/7569/M | Tharshana Thavaranjan | J/M.L.C | Tam | 66.5 | 122 |
| 126 | J/8342/B | Mahendran Shankeethan | J/K.H.C | Eng | 66 | 126 |
| 127 | J/8015/B | Mathangi Raveendran | J/V.G.H.S | Tam | 66 | 126 |
| 128 | J/7211/M | Preethy Srinevasan | J/C.G.C | Tam | 66 | 126 |
| 129 | J/7230/M | Sarannija Sivarasa | J/V.G.H.S | Tam | 66 | 126 |
| 130 | J/8309/B | Thiyakarasa Kiritharan | J/C.S.M.V | Tam | 66 | 126 |
| 131 | J/8132/B | Gobika Shandraraj | J/V.G.H.S | Tam | 66 | 126 |
| 132 | J/8628/B | Ranjithkumar Vinojan | J/K.H.C | Tam | 66 | 126 |
| 133 | J/7143/M | Anpalakan Akimsan | J/V.C.C | Tam | 66 | 126 |
| 134 | J/8578/B | Shama Anjum Thajudeen | J/V.G.H.S | Tam | 66 | 126 |
| 135 | J/7185/M | Inpagaran Shinthujan | J/J.H.C | Tam | 65.5 | 135 |
| 136 | J/7427/M | K. Bhaskkarasharma | J/J.H.C | Eng | 65.5 | 135 |
| 137 | J/7563/M | Pathmanathan Nishanthan | J/J.H.C | Tam | 65.5 | 135 |
| 138 | J/8282/B | Maheswaran Yathurshan | J/S.P.C | Tam | 65.5 | 135 |
| 139 | J/8140/B | Sharumathy Shanmugathas | J/V.G.H.S | Tam | 65.5 | 135 |
| 140 | Kn/7561/M | Kamalanathan Nilakshan | Kn/R.M.V | Tam | 65.5 | 135 |
| 141 | J/8067/B | Karthiga Satkuneswaran | J/V.G.H.S | Tam | 65 | 141 |
| 142 | J/8007/B | Thuvaraka Edward | J/V.G.H.S | Tam | 65 | 141 |
| 143 | J/7429/M | F. R. J. Jude Dinoshan | J/S.P.C | Eng | 65 | 141 |
| 144 | J/7254/M | Thanusayini Rasalingam | J/V.H.C | Tam | 65 | 141 |
| 145 | J/7160/M | Vickneswaran Abinajan | J/J.H.C | Tam | 65 | 141 |
| 146 | J/8568/B | Mary Diulini Jesuthasan | J/H.F.C | Tam | 65 | 141 |

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.